# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி 11 செவ்வாய்க்கிழமை (27-08-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:273


# நிரந்தரமான தடை நீக்கம் அதில் மாற்றம் இருக்காது!

## விடுதலைப் புலிகள் திடமாக நம்பிக்கை

லண்டன்,ஓகஸ்ட் 27

**தாய்லாந்தில் அரசுத் தரப்புக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னர், புலிகள் இயக்கம் மீதான தடையை இலங்கை அரசு முற்றாக நீக்கும் என்று விடுதலைப் புலிகள் திடமாக நம்புகின்றனர்.**

**புலிகளுடன் நெருக்கமான வட்டாரங்கள் இத் தகவலை வெளியிட்டன.**

அரசு - புலிகள் நேரடிப்பேச்சு எதிர்வரும் 16ஆம் திகதி தாய்லாந்தில் ஆரம்பமாகவிருக்கின்றது. அதற்குப் பத்து நாள்களுக்கு முன்னர் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டுவிடும் என்று அரசுத் தரப்பிலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், தடை ஒரு மாதத்துக்குத்தான் நீக்கப்படும் என்றும், சமாதானப் பேச்சுக்களின் முன்னேற்றத்தைப் பொறுத்து மாதந்தோறும் மீள்பரிசீலனையின் அடிப்படையில் அது நீடிக்கப்படும் என்றும் சில செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டுள்ளன.

அதுகுறித்துக் கேட்டபோதே, புலிகளின் வட்டாரங்கள் மேற்படி கருத்தைத் தெரிவித்தன.

பகுதி பகுதியாகத் தடைநீக்கம், மாதாந்தம் நீக்கம் என்ற அடிப்படையில் வெளியாகும் செய்திகளைத் தாங்கள் நம்பவில்லை என்றும்; தங்களுக்கு உறுதியளித்தபடி தடையை அரசு முற்றாக நீக்கும் என்பதில் தங்களுக்குச் சிறிதளவேனும் சந்தேகம் இல்லை" என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ம)

## இடைக்கால நிர்வாகசபை குறித்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்தக்கோரி வழக்கு!

கொழும்பு,ஓக.27

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாகசபை ஒன்றை அமைக்க முன்னர், அது குறித்து மக்களின் கருத்தை அறிய சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட வேண்டும். அதற்கான உத்தரவை தேர்தல் ஆணையாளருக்கு வழங்குங்கள்!

- இவ்வாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவை நேற்றுப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம், மனுவை விசாரணைக்கு ஏற்கலாமா என்பது குறித்து அடுத்தமாதம் 16ஆம் திகதி ஆராய்ந்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திர ஆணைக்குழுக்கள் ஒரு மாதத்துக்குள் நியமனம்!

கொழும்பு,ஓக.27

அரசமைப்புக் கவுன்ஸிலினால் நீதி, பொலீஸ், தேர்தல் மற்றும் பொதுச்சேவை ஆகியவை தொடர்பான நிர்வாக நடவடிக்கைகளுக்கான சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிக்கும் பணி ஒருமாதத்துக்குள் பூர்த்தியடையும் எனத் தற்போது அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான திட்டமொன்றை அரசமைப்புக் கவுன்ஸில் வகுத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இதன்படி பலதரப்பட்ட தொழில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் துப்பாக்கிச்சூடு; ஒருவர் பலி! மற்றொருவர் காயம்!!

திருகோணமலை,ஓக.27

திருகோணமலை நகருக்கு வடக்கே உள்ள வீரநகர் என்னும் இடத்தில் கடந்த 25ஆம் திகதி இரவு 8மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் அதே இடத்தில் கொல்லப்பட்டார்; மற்றொருவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

கொல்லப்பட்ட 3 பிள்ளைகளின் தந்தையான டக்ளஸ் தயாசிறி

(12ஆம் பக்கம் பார்க்க)

## உலக வங்கிக் குழு நேற்று யாழ். வந்தது

யாழ்ப்பாணம்,ஓக.27

குடாநாட்டில் பாடசாலைகளைப் புனரமைப்பது மற்றும் அவற்றின் கல்விநிலை ஆகியன குறித்து நேரில் அறிய உலக வங்கிக் குழு நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

உலக வங்கி ஆலோசகர்கள், அதிகாரிகள் மற்றும் மத்திய, மாகாண கல்வியமைச்சர்களின் அதிகாரிகள் என 25பேர் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

பாடசாலைகளில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய கல்விச் சீர்திருத்தத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து இக்குழு விசேடமாக ஆராயவிருக்கின்றது.

குடாநாட்டில் உள்ள 1ஏ.பி பாடசாலைகளின் அதிபர்களை இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். கல்வி வலயத்தின் முகாமைத்துவ மண்டபத்தில் சந்திக்கும் இக்குழு தற்போதைய கல்வி நிலை குறித்து விரிவாக ஆராயும். சில பாடசாலைகளுக்கும் இக்குழு நேரடியாக விஜயம் செய்யவிருக்கின்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

### எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்ட

## உள்ளூராட்சித் தேர்தல் மீண்டும் வடக்கு-கிழக்கில் ஒத்திவைப்பு?

கொழும்பு,ஓக.27

வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை எதிர்வரும் 25ஆம் திகதி நடத்துவதில்லை என்று அரசு முடிவுசெய்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தேர்தல் திணைக்கள அதிகாரிகளுடன் இடம்பெற்ற சந்திப்பில் இப்படிக் கூறியதாக அறியவந்தது.

வடக்கு - கிழக்கில் பாதுகாப்பு நிலைமை சுமுகமாக இருக்கின்றது. எனினும் தற்சமயம் இடம்பெறவிருக்கும் பேச்சுக்கள் காரணமாக தேர்தலை ஒத்திவைக்க அரசு முடிவு செய்துள்ளது. இத்தேர்தல் ஒத்திவைப்புக்கு சட்டச் சிக்கல்கள் உள்ளன. அவை தொடர்பாக அரசு ஆராய்ந்து கொண்டிருக்கின்றது என்றும் அவர் சொன்னார் என்று கூறப்பட்டது.

தேர்தல் தொடர்பாக தேர்தல் திணைக்கள அதிகாரிகள் உள்ளூராட்சி அமைச்சர் அலுக் அலுவிகாரவுடன் கலந்துரையாடியுள்ளனர்.

தேர்தலை பிற்போடுவதாக அரசு முடிவு செய்துள்ளது என்று அமைச்சர், தேர்தல் திணைக்கள அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார் என்றும் கூறப்பட்டது. (ம-3)

## தடைநீக்கம் குறித்து இன்று சிங்கள எம்.பிக்கள் ஆராய்வு

கொழும்பு,ஓக.27

விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை அரசு நீக்கவிருப்பது குறித்து ஆராய நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் சிங்கள எம்.பிக்களின் அமைப்பு விசேட கூட்டமொன்றைக் கூட்டியிருக்கிறது. இக்கூட்டம் இன்று நண்பகல் நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெறும்.

சிங்கள எம்.பிக்களின் அமைப்பின் அழைப்பாளரான ம.ஐ.முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்தன இக் கூட்டம் கூட்டப்பட்டிருப்பதை நேற்றுத் தெரிவித்தார்.

தடை நீக்கம், சமாதானப் பேச்சுக்கள், எதிர்கால நடவடிக்கைகள் ஆகியவை குறித்து இந்த அமைப்பு ஆராயவிருக்கிறது. (ம)

## பிரதமரின் செயலர் யாழ்.வருகிறார்

பிரதமரின் பணிப்பின் பேரில் அவரது செயலாளர் பிரட்மன் வீரக்கோன் எதிர்வரும் 31ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றார். யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைவரம் குறித்தும் இங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் குறித்தும் - அவர் ஆராய்வார்.

## நிலைமைகளை நேரில் கண்டறிய விரைவில் வடக்கிற்குச் செல்வேன்

### மல்வத்தை மகாநாயக்கர் அமைச்சரிடம் தகவல்

கொழும்பு,ஓக.27

நாட்டின் இன்றைய நிலைமையை நேரில் கண்டறிவதற்காக அடுத்த சில தினங்களில் வடக்கிற்குச் செல்வேன் என்று மல்வத்தை மகாநாயக்கர் ரம்புக்வெல்லே ஸ்ரீ விபஸ்ஸி தேரர் கூறினார்.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன கடந்த சனிக்கிழமை மல்வத்தை பீடத்துக்குச் சென்று மகாநாயக்கரைச் சந்தித்தபொழுதே அவர் இதனைக் கூறினார்.

மகாநாயக்கர் கருத்துத் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது:-

திறமையான இராணுவ அதிகாரியான கொப்பேகடுவவுடன் நான் முன்னர் வடக்கில் சுற்றுப்பயணம் மேற்

(12ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதியின் 'ஐக்கியத்துக்கான தேசிய உரையாடல்'

## செப். 2 ஆம் திகதி பொதுமக்களின் சாட்சியம் பதிவுசெய்யும் முதல் நிகழ்ச்சி

கொழும்பு,ஓக.27

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் ஆரம்பிக்கப்பட்ட 'ஐக்கியத்திற்கான தேசிய உரையாடல்' திட்டத்தின் கீழ் பொதுமக்களின் சாட்சியங்களைப் பதிவுசெய்யும் முதலாவது நிகழ்ச்சி எதிர்வரும் 2 ஆம் திகதி நடைபெறவிருக்கின்றது.

ஜனாதிபதியின் தலைமையில் அன்று பிற்பகல் 3 மணிக்கு சாட்சியங்களைப் பதிவுசெய்வது ஜனாதிபதி மாளிகையில் ஆரம்பமாகும் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவிக்கின்றது.

சாட்சியங்களைக் கோருவதற்காக 13நிபுணர்கள் கொண்ட சபை ஒன்றை ஜனாதிபதி நியமித்திருக்கிறார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கு - கிழக்கு பகுதிகளில் மேற்கொள்ளவுள்ள

## அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து கிளிநொச்சியில் நேற்றுப் பேச்சு!

கிளிநொச்சி,ஓக.27

வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படவேண்டிய புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக கிளிநொச்சியில் நேற்று நடந்த சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

சமாதானச் செயலணிப் பணிப்பாளர் பேர்னாட் குணதிலக தலைமையில் வந்த குழுவுக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவுக்கும் இடையில் காலை 9.45 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை பேச்சுக்கள் இடம்பெற்றன.

ஜப்பானிய வங்கி நிறைவேற்று ஆலோசகரும் பேராசிரியருமான நிக்கி மூறா, அவ்வங்கியின் மற்றொரு நிறைவேற்று ஆலோசகரான மொன்றோ காசீம், தேசிய அபிவிருத்தி வங்கி அதிகாரியான ரான் விக்கிரமரத்ன, ஜனசவிய வங்கி அதிகாரியான குணசேன ஆகியோரும் பேர்னாட் குணதிலகவுடன் கிளிநொச்சி பேச்சில் கலந்துகொண்டனர்.

தமிழ்ச்செல்வனுடன் நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தியும் பேச்சில் கலந்துகொண்டார்.

வன்னியில் உள்ள குளங்களைப் புனரமைப்பதன் மூலம் விவசாயத் துறையை அபிவிருத்தி செய்யலாம் என்றும் -

வடக்கு - கிழக்கு, மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வதன் மூலம் கடல் உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்யலாம் என்றும் - கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

எந்தவகையான அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தலாம் என்பது குறித்தும் அங்கு விரிவாக ஆராயப்பட்டது. (ம-3)

## புனரமைப்புப் பணி பற்றி ஆராய பன்னாட்டுக் குழு

### இன்று கிளிநொச்சிக்கு விஜயம்

கிளிநொச்சி,ஓக.27

வடக்கு - கிழக்கில் புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகளை மேற்கொள்வது தொடர்பாக, விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடுவதற்காக பன்னாட்டு அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் குழு ஒன்று இன்று கிளிநொச்சிக்கு வருகின்றது.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவுடன் இவர்கள் கலந்துரையாடவிருக்கின்றனர்.

வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனர்வாழ்வு, புனரு

(12ஆம் பக்கம் பார்க்க)

# விளையாட்டு

## இங்கிலாந்து மண்ணில் இந்தியா பெருவெற்றி!

லண்டன்,ஓக.27

லண்டன் லீட்ஸ் மைதானத்தில் நடந்த இங்கிலாந்து - இந்தியா இடையேயான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தில் இந்திய அணி ஒரு இனிங்ஸ் 46ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெரு வெற்றிபெற்றுள்ளது.

இங்கிலாந்து அணித் தலைவர் நஸார் ஹுசேனும் முன்னாள் அணித் தலைவர் அலெக்ஸ் ஸ்ருவேட்டும் நிதானமாக விளையாடி 5ஆவது விக்கெட் இணையாக 117 ஓட்டங்களைக் குவித்தபோதும் அணியின் தோல்வியை சற்றுத் தாமதப்படுத்த மட்டுமே அவர்களால் முடிந்தது. ஹுசேன் 110 ஓட்டங்களைப் பெற்றார்.

முன்னதாக தனது முதலாவது இனிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி ஓட்டங்களைக் குவித்தது. ட்ராவிட் 148ஓட்டங்களையும் சச்சின் டென்டுல்கர் 193, கங்குலி 128 ஓட்டங்களையும் குவித்தனர். இதனால் இந்திய அணி 8 விக்கெட் இழப்புக்கு 628 ஓட்டங்கள் என்ற பலமான நிலையில் தனது ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி தனது முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 273 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதனால் அந்த அணியால் பொலோன் செய்வதைத் தவிர்க்க முடியவில்லை. தொடர்ந்தும் தனது இரண்டாவது இனிங்ஸை ஆட ஆரம்பித்தது இங்கிலாந்து அணி. ஆனாலும் ஆரம்பத்தில் இருந்தே அந்த அணியின் விக்கெட்டுக்கள் தொடர்ச்சியாக வீழ்ந்தன. இதனால் இந்தியாவின் வெற்றி உறுதிப்பட்டது. எனினும் 5ஆவது விக்கெட்டுக்காக இணைந்த நஸார் ஹுசேனும் அலெக்ஸ் ஸ்ருவேட்டும் நின்று நிதானமாக ஆடினர். ஆனால் அவர்களால் அணியை தோல்வியில் இருந்து மீட்க முடியவில்லை. இறுதியில் இங்கிலாந்து அணி 309 ஓட்டங்களுக்கு தனது அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இந்திய அணி ஒரு இனிங்ஸ் 46 ஓட்டங்களால் வென்றது. மிகநீண்ட காலத்துக்குப் பின்னர் இந்திய அணி வேற்றுநாட்டு மண்ணில் பெற்ற மிகப் பெரிய டெஸ்ட் கிரிக்கெட் வெற்றி இது எனக் கூறப்படுகின்றது.

நான்கு ஆட்டங்களைக் கொண்ட இந்த டெஸ்ட் தொடரில் முதலாவது ஆட்டத்தை இங்கிலாந்து கைப்பற்றியது. இரண்டாவது ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்தது. மூன்றாவது ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற்றுள்ளது. எனவே அடுத்த மாதம் 5ஆம் திகதி லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெறவுள்ள இறுதி டெஸ்ட் ஆட்டமே தொடரில் வெற்றி பெறும் அணியைத் தீர்மானிக்கும். (ம)



விக்கெட் வீழ்த்திய மகிழ்ச்சியில் இந்திய வேகப் பந்துவீச்சாளர் சஹீர் கான்.

## அமெ.பகிரங்க டெனிஸ் நேற்று ஆரம்பமானது

அமெரிக்க பகிரங்க டென்னிஸ் சுற்றுப் போட்டி நேற்று ஆரம்பமானது. செப்ரெம்பர் 8ஆம் திகதிவரை இப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

கடந்த வருடம் செப்ரெம்பர் 11 ஆம் திகதி நியூயோர்க், வாஷிங்ரன் ஆகிய நகரங்கள் மீதான தாக்குதல் நடத்தப்பட்டது. இதன் முதலாவது வருட நிறைவுக்கு 3நாள்களுக்கு முன் இப்போட்டிகள் நிறைவடையவுள்ளன.

இந்நிலையில் இம்முறை இப்போட்டிகளில் கடுமையான பாதுகாப்பு நடைமுறைகள் அமுல்படுத்தப்படுகின்றன.

பார்வையாளர்கள் தீவிர சோதனையின் பின்னரே அரங்கிற்கு அனுமதிக்கப்படுவர். வானொலிப்பெட்டி, கமெரா முதலானவற்றை எடுத்துவர பார்வையாளர்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஒருவர் ஒரு 'பாக்' மாத்திரமே கொண்டு செல்லலாம்.

- இவ்வாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம)

### தாச்சிப் போட்டி

யாழ்ப்பாணம்,ஓக.27

யாழ்மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் அரியாலை காந்தி சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் நடத்தும் சுற்றுப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு காந்தி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் கோண்டாவில் மறுமலர்ச்சி வி.கழகமும், மானிப்பாய் ஆனந்தா வி.கழகமும் பங்குபற்றுகின்றன. (ம-ரி-86)

### இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.27

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் 'செற்அப்', 'ஓவர்கேம்' முறையிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை கலைமதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ இரவு 8 மணி - ஆவரங்கால் மத்திய வி.க. எதிர் விஸ்னு வி.க. ('செற்அப்')

★ இரவு 8.30 மணிக்கு - சிறுப்பிட்டி ஜனசக்தி வி.க. எதிர் யாழ். பவானி வி.க. ('ஓவர்கேம்'). (ம-ரி)

# புலிகளின் பிரதேசத்தில் சேதமுற்ற பாடசாலைகள் உடன் புனரமைப்பு!

## விவரம் திரட்ட அதிகாரிகள் குழு அங்கு விஜயம்

கொழும்பு,ஓக.27

வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் யுத்தத்தால் அழிந்திருக்கும் பாடசாலைகளைப் புனரமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை கல்வி, கலாசார அமைச்சு ஆரம்பித்திருக்கிறது. இதற்கென அமைச்சின் அதிகாரிகள் குழு ஒன்று நேற்றுமுன்தினம் கொழும்பிலிருந்து வடக்கே சென்றிருக்கிறது.

இக்குழுவினர் அழிந்த பாடசாலைகளின் விவரங்களைத் திரட்டியதும் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும். புனரமைப்புப் பணிகளுக்கு உலக வங்கி நிதியுதவி வழங்கும்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான நடவடிக்கைகள் தொடருவதால், வடக்கு - கிழக்கில் அபிவிருத்திப் பணிகளைத் துரிதப்படுத்துவது என்று இரண்டு தரப்பினரும் அண்மையில் இணங்கியிருந்தது தெரிந்ததே.

இதையடுத்தே கல்வித்துறையில் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிக்க கல்வியமைச்சு முன்வந்திருக்கிறது.

உலக வங்கியின் இலங்கைப் பிரதிநிதிகளும் வடக்கே சென்ற அமைச்சின் அதிகாரிகள் குழுவுடன் இணைந்திருக்கின்றனர்.

வடக்கு - கிழக்கில் இதுவரை விடுவிக்கப்படாத பிரதேசங்களிலுள்ள 10 கல்வி வலயங்களில் அழிந்திருக்கும் பாடசாலைகளைப் புனரமைக்கும் திட்டத்தை வகுப்பதே இந்த அதிகாரிகள் குழுவின் முக்கிய பணியாகும்.

அப்பாடசாலைகளைப் புனரமைக்கத் தேவையான பணம், பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்க மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகள் குழு ஆராயும். (ம)

### விவரங்களை அனுப்பக் கோரிக்கை

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் தோற்றிய சித்திபெற்ற அந்தண மாணவர்கள் தமது சுயவிவரங்களை செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பிவைக்குமாறு நியந்த்ரீயின் செயலாளர் கேட்டுள்ளார். (எ-ரி)

## கொழும்பு சென்ற பஸ்ஸை மறித்து துப்பாக்கி முனையில் கொள்ளை!

கொழும்பு,ஓக.27

பதுளையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் சொகுசு பஸ்வண்டியொன்று நான்கு பேரடங்கிய கொள்ளையர்களின் கைவரிசைக்கு ஆளானது. அப்புத்தளை பொலீஸ் பிரிவுக்குட்பட்ட வல்ஹப்புத்தன என்ற இடத்தில் கடந்த ஞாயிறு நள்ளிரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

பதுளையிலிருந்து 40 பயணிகளுடன் ஞாயிறு இரவு 10.45 மணியளவில் புறப்பட்ட இந்த பஸ் வல்ஹப்புத்தன தேசிய பாடசாலைக்கருகில் பொலீஸ் சீருடை அணிந்த நபரொருவரால் நிறுத்தப்பட்டுள்ளது. பஸ் நிறுத்தப்பட்டதும் ஆயுதந் தாங்கிய நால்வர் பஸ்ஸுக்குள் புகுந்து கைத்துப்பாக்கிகளைக் காட்டி, யாரும் கூச்சலிடவேண்டாம் என எச்சரித்தது. கினிகத்தகல என்ற இடத்தை நோக்கிச் செல்லும் சிறு வீதி வழியாக பஸ்ஸை செலுத்துமாறு பணித்துள்ளனர்.

பின்னர் பஸ்ஸை நிறுத்தி இருவர் இருவராக இறங்கச் சொல்லி, சோதனையிட்டு பயணிகளிடமிருந்து பணம், நகை மற்றும் பெறுமதியான பொருள்கள், செலூலர் போன் என்பவற்றைக் கொள்ளையடித்துக்கொண்டு தப்பிச் சென்றுவிட்டனர்.

மடுல்சீமையைச் சேர்ந்த பயணி ராமையா தீபா என்பவர் கூறுகையில், பொலீஸ் சோதனைச்சாவடியில் தாங்கள் சோதிக்கப்பட்டு நகை, பணம் கொள்ளையிடப்பட்டதாகத் தெரிவித்தார்.

கே.டி.ஏ.தயானந்த தெரிவிக்கையில் கொள்ளையிட்டவர்கள் சிங்கள மொழியில் பேசிய இளைஞர்கள் என்றார்.

கொள்ளையிடப்பட்ட செல்போன்கள் வீசியெறியப்பட்டிருந்ததை பொலீஸார் பின்னர் கண்டுபிடித்தனர். வசியெறியப்பட்ட செல்போன் ஊடாக கிடைத்த தகவலை அடுத்தே பொலீஸார் அங்கு விரைந்தனர்.

இக்கொள்ளை தொடர்பாக பண்டாரவளை உதவிப் பொலீஸ் அத்தியட்சகர்களான டி.டி.விஜயபால, கே. தரவிட ஆகியோரின் பணிப்பில் அப்புத்தளை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரசிக்கரட்ணாயக்க விசாரணைகளை மேற்கொண்டிருக்கிறார். (ம)

## சிறையிலுள்ளோரைப் பார்ப்பதற்கான 'உயிர்ப்பினை நோக்கி'ய பயணம் கிளிநொச்சியில் இருந்து ஆரம்பம்

கிளிநொச்சி,ஓக.27

சிறைகளில் உள்ள தமிழ்க் கைதிகளை நேரில் பார்வையிட்டு அவர்களின் மனவுணர்வுகளை பகிர்ந்து கொள்ள வன்னிப்பிரதேச ஆசிரியர்கள் ஏற்பாடு செய்துள்ள 'உயிர்ப்பினை நோக்கி...' என்ற அரங்காற்றுகைப் பயணம் இன்று கிளிநொச்சியில் ஆரம்பமாகிறது.

இந்தப் பயணம் வவுனியா சிறைச்சாலைக்கு நாளையும் -

திருகோணமலை சிறைச்சாலைக்கு 29ஆம் திகதியும் -

மட்டக்களப்புச் சிறைச்சாலைக்கு 30ஆம், 31ஆம் திகதிகளிலும்-

கொழும்பிலுள்ள சிறைச்சாலைகளுக்கு எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகளிலும் -

மன்னார் சிறைச்சாலைக்கு எதிர்வரும் 3ஆம் திகதியும் - சென்று சேரவுள்ளது.

கிளிநொச்சி அழகியற் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் வன்னி ஆசிரியர்கள் இந்தப் பயணத்தை மேற்கொள்கின்றனர். (ம-3)

## காணாமற்போனோர் குறித்த இரகசியப் பொலீஸாரின் அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவேண்டும்

### பாதுகாவலர் சங்கம் தீர்மானம்

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் காணாமற்போனோர் தொடர்பாக இரகசியப் பொலீஸார் நடத்திய விசாரணை தொடர்பான அறிக்கை உடனடியாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும் எனக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

சங்கத்தின் முக்கிய கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் யாழ். முனியப்பர் ஆலய முன்றிலில் நடைபெற்றபோதே இதுதொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேற்படி கலந்துரையாடலில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

★ காணாமற்போனோர் தொடர்பாக இரகசியப் பொலீஸார் மேற்கொண்ட விசாரணை அறிக்கை கடந்த மாதம் 31 ஆம் திகதி யாழ். நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இது வரை அது சமர்ப்பிக்கப்படவில்லை. அது உடனடியாக நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவேண்டு.

★ வடபகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பாக அவர்களது உறவினர்களால் கொழும்பு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வது.

★ இந்த வழக்குகளுக்கான உதவிகள்; ஆலோசனைகள் மற்றும் அதற்குத் தேவையான நிதியுதவி போன்றவற்றை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது அமைப்புக்களிடம் இருந்து பெறுவது - என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

இதேவேளை - அண்மையில் தென்னிலங்கையில் உள்ள சிறைச்சாலைகளுக்கு சென்று கைதிகளைப் பார்வையிட்ட மேற்படி சங்கப் பிரதிநிதிகள் அதுகுறித்து விளக்கினர்.

குழுவுக்குத் தலைமை வகித்துச் சென்ற சங்கத்தின் செயலாளர் எஸ். சற்குணம் தனது உரையில் தெரிவித்ததாவது:-

நாங்கள் கடந்த 5.2.08.2002 இங்கிருந்து கொழும்பு சென்றோம். அடுத்த நாள் யாழ்.மாவட்ட எம்.பி. சிவாஜிலிங்கம் தலைமையில் பிரதமரைச் சந்தித்தோம். அவர், "நீங்கள் முதலில் சிறைச்சாலைகளுக்குச் சென்று; அங்கு, உங்கள் உறவினர்கள் இருக்கிறார்களா என்று அறியுங்கள். அதன் பின் மேலதிக நடவடிக்கை எடுக்கலாம்" எனத் தெரிவித்தார்.

நாங்கள் களுத்துறை, வெலிக்கடை சிறைச்சாலைகளின் ஆண், பெண் சிறைச்சாலைகளைப் பார்வையிட்டோம் அங்குள்ளோர், தமிழ்க் கைதிகளை ஓரிடத்தில் கூட்டி எமக்குக் காட்டினர்.

எம்மிடமிருந்த காணாமல்போனவர்களின் படங்களில் உள்ள எவரும் அங்கே இருக்கவில்லை.

நாங்கள் நீர்கொழும்புச் சிறைச்சாலைக்குச் சென்றபொழுது அங்கு இரட்டைக் குழந்தைகளின் தாய் ஒருவரையே எங்களால் சந்திக்க முடிந்தது. அவரது கஷ்ட நிலையை உணர்ந்த சிவாஜிலிங்கம் எம்.பி. பண உதவியும் செய்தார்.

ஆனால், இரண்டு தினங்கள் கழித்து, அனுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்றபொழுது நீர்கொழும்பில் நாங்கள் கண்ட அதே இரட்டைக் குழந்தையின் தாயாரை அங்கே சந்தித்தோம் அதற்குள்ளாக அவர் அங்கு மாற்றப்பட்டிருந்தார் (அவர் அண்மையில் விடுவிக்கப்பட்டது தெரிந்ததே) வேறு எவரையும் நாங்கள் அனுராதபுரச் சிறையில் காணவில்லை.

பலாலி போன்ற உயர்பாதுகாப்புப் பிரதேசங்களுக்குச்சென்று உறவினர்களை தேட எம்மால் இயலாது. சிறைச்சாலைகளில் காணாமற்போனவர்களை தேடும்பணி எமக்கு பூரண திருப்தி அளிக்கவில்லை - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

காணாமற்போனவர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் - அதற்கான சட்ட ஆலோசனை பெறவேண்டும் என்றும் -

குடாநாட்டில் மக்கள் காணாமற்போன காலத்தில் வடபகுதி இராணுவத் தளபதியாக இருந்த ஜானக பெரேராவை பிரதான பிரதிவாதியாகக் குறிப்பிட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யவேண்டும் என்றும் -

காணாமற்போனவர்களுள் 267 பேர் கொல்லப்பட்டுவிட்டார்கள் என்று தெரிவிக்கும் அறிக்கையை நம்பி ஏற்கமுடியாதென்றும் - கூட்டத்தில் மேலும் முடிவு செய்யப்பட்டது.(எ-ரி-4)

# வறுமைக் கடலின் மத்தியிலே உலக சமுதாயம் வாழ்கின்றது!

## உலக மாநாட்டில் தென்னாபிரிக்க அதிபர் வேதனை

லண்டன்,ஓக,27

உறுதியான அபிவிருத்தி குறித்த ஐ.நா. உலகமாநாடு நேற்று தென்னாபிரிக்காவின் ஜோகன்ஸ்பேர்க் நகரில் ஆரம்பமானது. பணக்கார நாடுகளுக்கும் ஏழை நாடுகளுக்கும் சம சந்தர்ப்பம் வழங்கும் வகையில் மாநாட்டின் நிகழ்ச்சி நிரல் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தென்னாபிரிக்க அதிபர் தபோ பெகி உலக மாநாட்டை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தார். அத்துடன் அவர் தொடக்க உரையாற்றினார்.

'வறுமைக் கடலால் சூழப்பட்ட வளம் என்ற தீவுகளில் உலக சமுதாயம் வாழ்ந்து வருகிறது' என்று அவர் அப்போது தெரிவித்தார்.

10 நாள்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் 40ஆயிரம் பிரதிநிதிகள் மற்றும் சுமார் 100நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்கின்றனர். தண்ணீர், சக்தி, சுகாதாரம், விவசாயம் மற்றும் மனித வேறுபாடுகள் ஆகிய 5 விடயங்களே இந்த மாநாட்டில் பிரதானமாக ஆராயப்படவுள்ளன. இவற்றில் பணக்கார நாடுகளுக்கும் ஏழை நாடுகளுக்கும் இடையிலான ஏற்றத் தாழ்வுகளை விலக்க மேற்கொள்ள வேண்டிய செயல் முறைகளை வகுப்பதே மாநாட்டின் முக்கிய நோக்கம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாநாட்டைத் தொடக்கிவைத்த தென்னாபிரிக்க அதிபர் தனது உரையில் 'காட்டுமிராண்டித்தனத்தின் அடிப்படையில் வாழ்க்கையை மனித சமுதாயம் கட்டியெழுப்புவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. ஆகவேதான் இதுவரை இல்லாத அளவில் வறுமையை ஒழிப்பதற்கு மனித வரலாற்றில் முதற்றடவையாக உலகநாடுகளின் அனைத்து வளங்களையும் திரட்டிப் போராட ஒன்றுகூடியுள்ளோம் என்று தெரிவித்தார். (ஒ)



தென்னாபிரிக்காவின் ஜோகன்ஸ்பேர்க் நகரில் நேற்று ஆரம்பமான ஐ.நா. உலக சர்வதேச மாநாட்டின் தொடக்க நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இதில் இடம்பெற்ற கலாசார நிகழ்வுகளில் இரண்டை மேல் படங்களிலும், ஆபிரிக்க பாரம்பரிய மதசம்பிரதாயப்படி மதகுரு ஒருவர் மாநாட்டை ஆசீர்வதிப்பதை கீழுள்ள படத்திலும் காணலாம்.

# தென் ஆபிரிக்காவில் 3 இந்தியர் படுகொலை!

டர்பன்,ஓக.27

தென்னாபிரிக்காவில் 3 இந்தியர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

தென்னாபிரிக்காவில் சாட்ஸ் ஒர்த் நகரில், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தொழிலாளர்கள் அதிகமாக வசித்துவருகிறார்கள். இந்தப் பகுதியில் இந்தியர்கள் குறிவைத்துத் தாக்கப்படுவது அதிகரித்துவருகிறது.

அங்குள்ள கிரிக்கெட் மைதானம் அருகில் காரில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்த இந்தியர்கள் மீது கறுப்பினத்தவர் அடங்கிய கும்பல் ஒன்று கண்மூடித்தனமாகத் தாக்கியது. அடித்தும், கத்தியால் குத்தியும், துப்பாக்கியால் சுட்டும் நடத்திய தாக்குதலில் கிளைவ்பிள்ளை லூயிஸ், கவுண்டர் சண்டிபிள்ளை ஆகியோர் படுகொலை செய்யப்பட்டனர்.

கிரிக்கெட் விளையாட்டைப் பார்த்துவிட்டு அவர்கள் காரில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தபோது இந்தத் தாக்குதல் நடந்திருக்கிறது. அவர்கள் வைத்திருந்த பொருள்கள் அனைத்தையும் கும்பல் பறித்துச் சென்றுவிட்டது.

இந்தத் தாக்குதலில் மேலும் ஒருவர் பலியாகியிருக்கலாம் என்று தெரியவருகிறது.

பாதுகாப்புக் கருதி அவரது அடையாளங்களை வெளியிட தென்னாபிரிக்கப் பொலீஸார் மறுத்துவிட்டனர்.

கடந்த இரண்டு மாதங்களில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 10 பேர் இதுபோன்ற இனத்தாக்குதல்களுக்கு உள்ளாகி உயிரிழந்திருக்கின்றனர். சமீபத்தில் 2 இந்தியப் பெண்கள் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டனர். அவர்களது உடைமைகளும் கொள்ளையடிக்கப்பட்டன.(ஒ)

# தீவிரவாத சந்தேகநபருக்கு அமெ.முகாமில் சித்திரவதை!

செப்ரெம்பர் 11 தாக்குதல் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட நபர் ஒருவர் தான் அமெரிக்க சிறையில் மிகக் கொடூரமான சித்திரவதைகளை அனுபவித்தாகத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் உலக வர்த்தக மையம் மற்றும் பென்டகன்மீது நடத்தப்பட்ட விமானத் தற்கொலைத் தாக்குதல் சம்பவத்தின் சந்தேக நபரான நபில் அல்மரப் (வயது 35) என்பவரே சர்வதேச செய்தி ஊடகமொன்றுக்கு அமெரிக்காவில் தனக்கேற்பட்ட மனித உரிமைமீறல் செயற்பாடுகள் குறித்து விளக்கியுள்ளார்.

பல மாதங்கள் சிறையில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதுடன் சட்ட உதவியைப் பெறவும் தனக்கு அனுமதியளிக்கப்படவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

குவைத்தைச் சேர்ந்தவரான மரப், அமெரிக்க எல்லையை சட்டவிரோதமாகத் தாண்ட முயற்சித்த குற்றச்சாட்டின்பேரிலேயே அமெரிக்கப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார். ஆனால், செப்ரெம்பர் 11 தாக்குதலுக்கும் அவருக்கும் சம்பந்தமிருப்பதாகப் பொலீஸார் சந்தேகித்ததால் மரப் நியூயோர்க் மாநகரத் தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டார். செப்ரெம்பர் 11 தாக்குதல் சந்தேகநபர்கள் சுமார் 40பேர் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். தடுப்பு முகாமில்

உலக அரங்கில்

அமெரிக்கப் பொலீஸார் மிருகத்தனமாகத் தன்னைத் தலை உட்பட உடலெங்கும் அடித்ததாகவும் -

ஒவ்வொரு விரலாக முறித்ததாகவும் -

சட்டத்தரணி ஒருவரைச் சந்திக்கவோ, தனது உறவினர்களுடன் தொடர்புகொள்ளவோ அனுமதி மறுக்கப்பட்டதாகவும் - மரப் தெரிவித்தார். அமெரிக்கப் பொலீஸாரின் இந்த அராஜகத்துக்குத் தான் எதிர்ப்புத் தெரிவித்ததற்காக சிறுநீரில் தோய்க்கப்பட்ட மெத்தையில் உறங்கும்படி 10 நாள்கள் கட்டாயப்படுத்தப்பட்டதாவும் அவர் கூறியுள்ளார்.


தொடர்ந்து சில நாள்கள் பலத்த ஓசைகளை எழுப்பித் தன்னை உறங்கவிடாது செய்ததால் தன்னால் எதனையும் சிந்திக்க முடியாமலும், மறந்தும் போக நேரிட்டதாக அவர் குறிப்பிட்டார். இவ்வாறு தடுப்பு முகாமில் கடுமையான சித்திரவதைகளுக்குட்படுத்தப்பட்ட மரப் 8 மாதங்களின் பின்னர் தீவிரவாதச் செயல்களுடன் சம்பந்தப்படுத்தும்படியான ஆதாரங்கள் இல்லை என்று கூறி விடுவிக்கப்பட்டார். நபில் அல் மரப் உட்பட சுமார் ஆயிரத்து 200 பேர், விமானத் தற்கொலைத் தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தில் அமெரிக்கப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

தற்போது தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களில் ஒருவர்மீது கூட அமெரிக்கப் பொலீஸாரால் இதுவரை தீவிரவாதத்துடன் சம்பந்தப்பட்ட குற்றசாட்டுக்களை சுமத்தமுடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# பொலீஸார் மற்றும் அமைச்சரை வீரப்பன் கடத்தியது எப்படி?

ஈரோடு,ஓக.27

கர்நாடக முன்னாள் அமைச்சர் நாகப்பாவை (வயது 62) சந்தனமரக் கடத்தல் வீரப்பன் தலைமையில் ஆயுதங்களுடன் வந்த 9பேர் கொண்ட குழு கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு கடத்திச் சென்றது.




மேலும் அவருடன் பாதுகாப்புக்கு இருந்த 2 பொலீஸாரும் கடத்திச் செல்லப்பட்டனர்.

தமிழக எல்லையிலிருந்து 30கி.மீ. தொலைவில் கொள்ளேகால் அருகே உள்ள ஹனூர் பொலீஸ் பிரிவில் இக் கடத்தல் சம்பவம் நடந்துள்ளது.

தேவகௌடா தலைமையிலான ஜனதா தள அமைச்சரவையில் விவசாயத்துறை அமைச்சராக இருந்தவர் நாகப்பா.

சாம்ராஜ் நகர் மாவட்டம் கொள்ளேகால் பகுதி காமகரே என்ற ஊரில் தன் வீட்டில் இருந்தபோது, இரவு 10.15 மணிக்கு வீரப்பன் தலைமையிலான கும்பலால் அவர் கடத்தப்பட்டார்.

வீரப்பனுக்கு எதிராக நாகப்பா அடிக்கடி அறிக்கை விடுத்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றுமுன்தினம் ஹனூர் அருகே உள்ள ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்க நாகப்பா சென்றார். அவருடன் பாதுகாப்புக்காக 2 பொலீஸாரும் சென்றனர். அங்கிருந்து இரவு சுமார் 10 மணியளவில் காரில் வீட்டுக்குத் திரும்பினார் நாகப்பா. வீட்டின் முன் கதவைப் பூட்டிக்கொண்டு உள்ளே இருந்தார்.

இந்நிலையில், சந்தனமரக் கடத்தல் வீரப்பன் தலைமையில் 9 பேர் கொண்ட குழு வீட்டின் முன் கதவை உடைத்து உள்ளே நுழைந்தது. நாகப்பாவையும், வீட்டில் பாதுகாப்புப் பணியில் இருந்த 2 பொலீஸாரையும் ஒரு வாகனத்தில் ஏற்றிக் கடத்திச் சென்றது. அவர்களைத் தமிழகக் காட்டுப் பகுதிக்குள் கடத்திச் சென்றதாக அதிகாரபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.


நாகப்பாவும், 2 பொலீஸாரும கடத்தப்பட்டது உண்மைதான் என்பதை தமிழக அதிரடிப்படைத் தலைவர் நடராஜன் நள்ளிரவு 12 மணியளவில் உறுதிசெய்தார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கன்னட நடிகர் ராஜ்குமார் உள்ளிட்டோரைக் கடத்தியபின் வீரப்பன் இப்போது மீண்டும் கைவரிசையைக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்தை அடுத்து கொள்ளேகால் பகுதியில் பெரும் பதற்றம் நிலவுகிறது. சத்தியமங்கலம், திம்பம் வழியாகக் கர்நாடக மாநிலத்துக்குச் செல்லும் சாலையில் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது. தமிழக கர்நாடக எல்லையில் ஏராளமான பொலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர். ரோந்துப்பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை காலையில் கன்னட நடிகர் ராஜ்குமார் கொள்ளேகால் அருகேயுள்ள தனது காஜனூர் பண்ணை வீட்டிற்கு வந்து சென்றார். இதையடுத்து அப்பகுதியில் கடும் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேலும், வீரப்பனின் நடமாட்டம் இப்பகுதியில் அதிகமிருப்பதால் அங்கு அதிரடிப்படையினர் தீவிரமாக கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். அப்படியிருந்தும் வீரப்பனின் ஆள்




கள், ஆள்கடத்தலில் ஈடுபட்டுள்ளனர்.

கன்னட நடிகர் ராஜ்குமார் முன்பு இதேபோல் தனது பண்ணை இல்லத்திற்கு வந்தபோது வீரப்பனால் கடத்திச் செல்லப்பட்டு 108 நாள்களுக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டார். அப்போது நக்கீரன் கோபால், நெடுமாறன் ஆகியோர் அரசுத் தூதர்களாக ராஜ்குமார் மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

இதற்கிடையில் நடிகர் ராஜ்குமாரின் மனைவி பார்வதம்மா, வீரப்பனைப் பிடிப்பதில் தமிழக, கர்நாடக அரசுகள் எடுக்கும் நடவடிக்கை சரியில்லை. இரு அரசுகளும் அதிக அளவில் செலவு செய்கின்றனவே தவிர, வீரப்பனைப் பிடிக்க முடியவில்லை. வீரப்பனைப் பிடிக்கும் பணியில் அதிகளவில் பொலீஸாரை ஈடுபடுத்தவேண்டும் என்று கூறியுள்ளார். (ஒ)

## உணவில் விஷம் கலந்து

# ஸ்லோவாக்கியா அதிபரை கொலைசெய்ய முயற்சி!

பிராட்டிஸ்லவா,ஓக.27

ஸ்லோவாக்கிய அதிபர் ருடோல்ப ஸ்ஸ்டரை உணவில் விஷம் கலந்து கொடுத்து கொல்ல முயற்சி நடந்ததாகக் கூறப்படுகிறது.

ஸ்லோவாக்கியா நாடாளுமன்றத்தில் அடுத்தமாதம் தேர்தல் நடக்கவிருக்கும் நிலையில், ஜனாதிபதி ருடோல்புக்கு திடீரென்று காய்ச்சல் ஏற்பட்டது. உடனே அவர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்டார் அங்கு அவரது உடலில் சோதனைகள் நடத்தப்பட்டன.

புதிய பிரதமரை நியமிக்கும் அதிகாரம் படைத்த அதிபரை யாரோ கொலைசெய்யும் நோக்கத்துடன் அவருக்கு உணவில் விஷம் கலந்து கொடுத்திருக்க வேண்டும் என்று அவரது குடும்பத்தினர் புகார் கூறினர். இதுபற்றி விசாரணை நடத்தவேண்டும் என்றும் அவர்கள் கோரினர். அறுபத்தெட்டு வயதான அதிபர் இரண்டு நாள்களுக்கு முன்புதான் வெப்பம் தாங்கமுடியாமல் மயங்கிவீழ்ந்து சிகிச்சை பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## ஊழல் குற்றம்சாட்டப்பட்ட

# பெனாஸிரை ஒப்படைக்குமாறு பிரிட்டனிடம் பாக். கோரிக்கை

இஸ்லாமாபாத்,ஓக..27

ஊழல் வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டு தண்டனை விதிக்கப்பட்ட பெனாஸிரைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு பிரிட்டனிடம் பாகிஸ்தான் அரசு கேட்டுள்ளது.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ, பிரிட்டனில் தன் குழந்தைகளுடன் வசித்துவருகிறார். பாகிஸ்தானில் வருகிற ஒக்ரோபர் மாதம் நடக்கவிருக்கும் தேர்தலில் அவர் கலந்துகொண்டு போட்டியிடவிருக்கிறார். இதற்காக விரைவில் பாகிஸ்தான் வர இருப்பதாக அவர் அடிக்கடி கூறிவருகிறார். அப்படி அவர் பாகிஸ்தானில் காலடி எடுத்து வைத்தால் அவரைக் கைது செய்யப் போவதாக பாகிஸ்தான் அரசும் அதிபர் முஷாரப்பும் மிரட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில், பெனாஸிர் தன் தேர்தல் பிரசாரத்தை லண்டனில் கடந்த சனிக்கிழமை தொடங்கினார் இதில் நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிலையிலேயே ஊழல் வழக்குகள் தொடர்பாக அவரிடம் விசாரிக்க வேண்டியிருப்பதால் அவரைப் பாகிஸ்தானுக்குத் திருப்பியனுப்புமாறு பிரிட்டனைப் பாகிஸ்தானிய அரசு கேட்டுள்ளது. (ஒ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மோட்டோறோலா தொலைபேசி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R.ஜெயராஜா, பாடசாலை வீதி, மாதனை, பருத்தித்துறை.T.P.: 070-212446.(7514)

மோட்டோறோலா தொலைபேசி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஸ்ரீராஜ் சங்கரத்தை, வட்டுக்கோட்டை. (7524)

**Sony G.21 T.V.** விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தி.பிரேம், 45, பாக் றோட், குருநகர். (7539)

பல நிறங்களில் லவ்பேட்ஸ், ஜவாபரட், விஞ்சோஸ், ஆபிரிக்க லவ்பேட்ஸ் குருவிகள், புதிய இன வர்ண மீன்கள், மீன் தொட்டிகள், தொட்டிக்குரிய அனைத்துப் பொருள்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 40/17, சீனியர் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (7548)

**LML Select II (Butter Milk Colour)** உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.செல்வநாதன், 119, கண்டி வீதி (பெந்தகோஸ் சபை அருகில்), யாழ்ப்பாணம். (7550)

நல்ல நிலையிலுள்ள OLYMPIA தமிழ்த் தட்டச்சு இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 162, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு. (7543)

## பசு விற்பனைக்கு

இரண்டாம் ஈற்று, மூன்று கிழமை நாகு கன்றுடன் மிகக்கூடிய பலன் தரும் கறவைப் பசு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அருளானந்தம் மாஸ்ரர், 27/3, நாகராஜா லேன், பாண்டியந்தாழ்வு. (7490)

## எங்கள் நாடு

350 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் பரிசுபெற்ற இலங்கை வானொலி நாடகங்கள். எங்களது இன்றைய வாழ்வைச் சித்திரிக்கும் நாடகங்கள். 119 பக்கங்கள், 7 நாடகங்கள். ரூபா 75/-. (7519)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், இங்கிலாந்துப் பிரஜை, கணனியில் இங்கிலாந்து அரசாங்க சான்றிதழ் பெற்றவர், வங்கி முகவர், வயது 42, திடகாத்திர தேகம் உடையவர். விசாரிப்பதற்கு இங்கிலாந்து விலாசம் தரப்படும். விரைவில் விவாகம் யாழ்ப்பாணத்தில். முதற் கடிதத்தில் முழுவிவரம் வேண்டும். தொடர்பு: விளம்பர இல. 1608, மே/பா உதயன். (7273)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1973இல் பிறந்த (மிருகசீரிடம் முதலாம் பாதம்), லண்டன் நிரந்தர பிரஜா உரிமை பெற்ற, கணனிப் பொறியியலாளருக்கு (Computer Engineer) படித்த, அழகான சிவந்த நிறமுள்ள மணமகள் தேவை. ஜாதகக் குறிப்புடன் தொடர்புகொள்ளவும் விள.இல. 1615, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (7547)

## தேவை

கேபிள் தொலைபேசி லைன் உரிமை மாற்றம் செய்து விற்க விரும்பின் உடன் தொடர்புகொள்ளவும் விளம்பர இல.1613, C/o உதயன், யாழ்ப்பாணம். (7529)

## வீடு வாடகைக்குத் தேவை

தாய், தந்தை, குழந்தை உடைய குடும்பத்திற்கு சிறிய அல்லது அனெக்ஸ் வீடு வாடகைக்குத் தேவை. (யாழ்நகரில் இருந்து கொக்குவில் வரை விரும்பத்தக்கது) தொடர்புகளுக்கு: T.P. 021-3497 அல்லது 2827 (7523)

## தவறிவிட்டது

வேலணை, துறையூரைச் சேர்ந்த சண்முகம் லோகேஸ்வரன் என்பவரது தே.அ.அ. (இல.722113837V) கடந்த வாரம் அல்லைப்பிட்டி சோதனைச்சாவடிக்கும் துறையூருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்.சத்திரத்துச் சந்திக்கு அருகில் உள்ள சிறிமாரி நகைமாடத்தில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (7540)

இணுவிலைச் சேர்ந்த நாகராசா கமலலோஜினி என்பவரது விசேட அடையாள அட்டை, வவுனியா கல்வியியற் கல்லூரி அடையாள அட்டை என்பன 24-08-1002 அன்று யாழ்.பிரதான பஸ்நிலைத்தில் பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கவி போட்டோ, கே.கே.எஸ். வீதி, இணுவில் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (7553)

# விதை கிழங்கைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

சண்டிலிப்பாய்,ஓக.27

உடுவில் கமநல சேவை கேந்திர நிலையப் பிரிவில் உருளைக் கிழங்கு செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கு தரமான நல்லின விதை உருளைக்கிழங்கைப் பெற்றுக் கொடுப்பது என்று கமநல கேந்திர நிலையத்தில் கடந்த 19ஆம் திகதி நடைபெற்ற விவசாய சம்மேளனங்களுடனான கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உடுவில் கமநல கேந்தர நிலையத்தில், பெரும்பாக உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் விவசாயிகள் சம்மேளனங்களின் பிரதிநிதிகள் தமது பிரிவில் உருளைக்கிழங்கு செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளின் பெயர்ப்பட்டியலையும், தேவைப்படும் விதை கிழங்கின் இனம், செய்கை பண்ணப்படும் பரப்பளவு ஆகிய விவரங்களையும் சமர்ப்பித்தனர். (எ-135)

# பத்தாம் ஆண்டு நினைவலைகள்

குவலயம் மகிழ 04 - 06 - 1946



இதயம் நெகிழ 27 - 08 - 1992

## திருமதி லூக்காஸ் அந்தோனிப்பிள்ளை (அழகு)

**எம் குடும்பத்தின் அன்பு மலராய் மிளிர்ந்து**
**எல்லோர்க்கும் அன்பு மணம் பரப்பி**
**எமை இனிதே வாழவைத்த எம் குலவிளக்கே!**
**உங்கள் நினைவுகள் என்றும் நிலைக்கும்!!**

*இவரது பிரிவால் துயருறும்:*
கணவர்: செபஸ்ரி ரெத்தினம்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
மைத்துனர்கள், உறவினர்கள், நண்பர்கள்.

*செபஸ்ரியார் வீதி,*
*குருநகர்,*
*யாழ்ப்பாணம்.* (7549)

# ஆன்மசாந்திக்கிரியைகள் அழைப்பு



*அன்புடையீர்!*
*11.08.2002 ஞாயிற்றுக்கிழமை பின்னிரவு சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்*

## அமரர் அருணாசலம் அமிர்தலிங்கம்

*(சமூகசேவை அலுவலர், - பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்)*

*அவர்களின் ஆன்மசாந்திக்கிரியைகள் நாளை (28.08.2002) புதன்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் நாம் வசிக்கும் இல்லத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. அதைத் தொடர்ந்து மதியபோசனமும் இடம்பெறும்.*

*குறித்த நிகழ்வுகளில் பங்குபற்றும்வண்ணம் உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.*

*"பிருந்தாவனம்,"*
*ஸ்ரேஷன் றோட்,*
*கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.*

- மனைவி, மக்கள்
குடும்பத்தினர்.

(7544)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 15 - 04 - 1925



மறைவு 28 - 07 - 2002

## திருமதி நல்லம்மா தம்பிமுத்து

**திதி: 27-08-2002**

*அன்பெனும் உணர்வையூட்டி அயர்விலா உழைப்பாலே*
*பண்புடன் உறவையெல்லாம் பகிர்ந்தெமக்களித்துவந்த*
*பாசம் எழுந்ததம்மா உங்கள் பரிவுதனைத் தேடுகையில்*
*எம்மைவிட்டு நீங்கள் நெடுந்தூரம் சென்றதேனோ?*
*காலனுமைக் கவர்ந்து மேலுலகம் சென்றாலும் - உங்கள்*
*கருணை விழியழகைத் தெவிட்டாத தேன் அன்பை அன்றாடம்*
*இன்புறுத்தும் உங்கள் அன்பான அரவணைப்பை*
*மீண்டும் மறுபிறப்பில் உம்மால் பெற்றிடவே இறைவனை*
*வேண்டுகின்றோம். நிழலாய் நின்று எமை அரவணைத்தாய்!*
*மெழுகாய் உருகி எமக்கு ஒளி தந்தாய்!*
*தாய்மை உள்ளம் என்பது தாயிடம்தான் என்பதை*
*எமக்குப் புகட்டினாய் தாயே!*

(7530)

*"ஹரிஸ்தான்",*
*மானிப்பாய் வீதி,*
*உடுவில், சுன்னாகம்.*
தகவல்: ஹரிஜயச்செல்வி

- மகள், மகன்மார்,
பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 16 ★ 03 ★ 1932



விண்ணில் 28 ★ 07 ★ 2002

## அமரர் பண்டாரி வேலன்

**அன்பின் இருப்பிடமே! பாசத்தின் பிறப்பிடமே!!**
**என்றும் எம்வாழ்வில் உம் நினைவை மறவோம்.**


இன்று (27-08-2002) செவ்வாய்க்கிழமை நண்பகல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்ற அந்தியேட்டிக்கிரியைகளிலும், மதியபோசனத்திலும கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கைதடி மேற்கு,*
*கைதடி.* (7528)

- குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 15 - 01 - 1918



மறைவு 29 - 07 - 2002

## அமரர் தம்பாபிள்ளை சின்னையா

**அன்பின் பிறப்பிடமே! பண்பின் உறைவிடமே!!**
**உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

எமது குடும்பத் தலைவர் த.சின்னையா அவர்களின் மரணச்சடங்கில் நேரடியாகக் கலந்துகொண்டவர்களுக்கும், தந்திமூலம் வருத்தத்தைத் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவிப்பதுடன், இன்று (27-08-2002) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*மதவடி ஒழுங்கை,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (7503)

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளை.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 07 - 04 - 1919



உதிர்வு 28 - 07 - 2002

## திருமதி மீனாட்சி ஐயாத்துரை

*திதி வெண்பா:*
*ஆண்டு சேர் சித்திரபானு ஆடி பதின்மூன்று*
*பூண்டதிதி சேர் அபரப் பஞ்சமியில் - மாண்புடைய*
*ஐயாத்துரை மீனாட்சி அம்பாள் அடிதழுவி*
*மெய்யாம் சுகம் பெற்றாள் மேல்.*

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமான அன்னையே!
தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (27.08.2002) செவ்வாய்க்கிழமை காலை நயினாதீவு கங்காதரணி தீர்த்தக் கரையிலும் , வீட்டுக்கிருத்தியம் நயினாதீவு, 5ஆம் வட்டாரத்திலுள்ள அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். இந்நிகழ்வுகளிலும் அதைத்தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஐ.கணேசலிங்கம்,*
*நயினாதீவு - 05.* (7546)

மக்கள், மருமக்கள்,
பேரர்கள், பூட்டப்பிள்ளைகள்.

உதயன்

# தீர்வுக்கு அத்திபாரமாகும் இடைக்கால நிர்வாகம்

"இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நீண்டநாள் பிடிக்கும். அதற்கு வருடக் கணக்கில் கூடச் செல்லலாம். அதுவரை காத்திருக்கமுடியாது. அதற்கு முன்னர் வடக்கு - கிழக்கு மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கவேண்டும். இதற்காகத்தான் நாம் வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்த ஆலோசிக்கின்றோம்."

- இவ்வாறு கூறியிருக்கின்றார் அமைச்சர் மிலிநத மொறகொட.

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியமித்திருக்கும் சமாதான செயலணியில் முக்கிய - மூத்த - உறுப்பினர் மிலிந்த மொறகொட. சமாதான முயறசிகள் தொடர்பாக அரசு - புலிகள் - நோர்வே அனுசரணையாளர்கள் என்று முத்தரப்பினரிடையேயும் ஓடித்திரிந்து பேச்சு நடத்தி வருபவரும் அவரே. எனவே, அவரது மேற்படி கூற்று இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசின் கருத்து என்று கருதலாம்.

இதேகருத்தைத்தான் விடுதலைப் புலிகள் நீண்டகாலமாகக் கூறிவருகின்றார்கள். இந்தக் கட்டத்திலாவது இலங்கை அரசுத்தரப்பு இதை ஒப்புக்கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது.

ரணில் தலைமையிலான அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுகள் கருக்கட்டிய காலத்திலேயே இந்த இடைக்கால நிர்வாகம் குறித்துப் புலிகள் பிரஸ்தாபித்திருந்தனர். அப்போதுமுதல் அவர்கள் இந்த இடைக்கால நிர்வாகம் ஏன் அவசியம் என்று கூறிவரும் ஓரம்சம் இப்போதும் பொருத்தமாக இருப்பது குறிப்பிடத்தக்கது. அதனையும் அமைச்சர் மொறகொட இப்போது சேர்த்துக் கூறியிருப்பாராயின் அவரது கூற்று இன்னும் வலுப்பெற்றிருக்கும்.

இலங்கையில் சிங்களப் பேரினவாத அரசுகளுக்கும், ஈழத்தமிழர்களுக்குமிடையிலான பரஸ்பர நம்பிக்கை சீர்கெட்டு, அழிந்துபோய் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாகிவிட்டது. இந்த நிலையில் இருதரப்பும் ஒரு மேசையில் அமர்ந்திருந்து, ஒருவர்மீது மற்றவர் நம்பிக்கை வைத்து, பேச்சுநடத்தி ஒரு தீர்வுக்கு இணங்குவது என்பது துர்லபமே. இருதரப்புக்கும் இடையல் பரஸ்பர நம்பிக்கை உருவாகாதநிலையில் எந்தத் தீர்வும் கிட்டுவதற்கு வாய்ப்புகள் இல்லை. பரஸ்பர நம்பிக்கை ஏற்படாத நிலையில் சிங்களத் தரப்பு தரக்கூடிய தீர்வு தமிழர் தரப்புக்கு ஏற்புடையதாக இருக்கமாட்டாது. அதுபோல, தமிழர் தரப்பு எதிர்பார்க்கின்ற தீர்வுயோச்னையை சிங்களத் தரப்பினால் நம்பிக்கை வைத்து வழங்க முடியாது.

என்வே, இருதரப்பும் தத்தமது இராணுவப் பலநிலையைப் பேணிக்கொண்டு, அதேசமயம் இருதரப்புகளுக்குமிடையில் நம்பிக்கையை வளர்க்கும் செயல்களில் அதிக ஆர்வத்துடன் ஈடுபடவேண்டும். அப்படிச் செய்வதன்மூலம் கட்டியெழுப்பப்படும் பரஸ்பர நம்பிக்கை என்ற அத்திபாரத்தின்மீதே நிரந்தரத் தீர்வு என்ற மாளிகை எழும்பமுடியும். அப்படி நேர்ந்தால்தான் தீர்வு மாளிகை இஸ்திரமாக - நிலைத்து - நீடித்து - நிற்கும்.

இந்தப் பரஸ்பர நம்பிக்கையைக் கட்டிவளர்க்கும் பல நடவடிக்கைகளில் இருதரப்பும் ஈடுபட்டிருப்பது இலங்கை மக்களால் சிலாகித்து வரவேற்கப்படுகின்றது. பேரினவாதிகள், தீவிரவாதிகள் என்று பலதரப்பு கூச்சல்களையும் ஒதுக்கி வைத்துவிட்டு இரண்டுதரப்புத் தலைவர்களும் தீர்க்கமான பல முடிவுகளை எடுத்து, துணிச்சலுடன் செயற்பட முன்வந்திருப்பது பாராட்டுக்குரியது.

பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையின் வரிசையில் இடைக்கால நிர்வாகமும் ஒன்று. அதைத்தான் புலிகள் ஆரம்பம்முதல் வற்புறுத்தி வந்தனர்.

இடைக்கால நிர்வாகத்தை உருவாக்கி வடகது - கிழக்குப் பிராந்திய நிர்வாக அதிகாரத்தைப் புலிகளிடம் நேர்சீராக ஒப்படைப்பதன்மூலம் புலிகளின் நம்பிக்கையை அரசும் -

நாட்டின் ஏனைய மக்களுக்குப் பாதிப்பில்லாத வகையிலும், அந்தப் பிரதேச மக்களின் அபிலாஷைகளை நிறைவுசெய்யும் விதத்திலும் அதை முறையாக நிர்வகித்து அரசின் நம்பிக்கையைப் புலிகளும் -

பரஸ்பரம் கட்டிவளர்த்தால் நிரந்தரத் தீர்வுக்கான அத்திபாரமாக அது அமைவது நிச்சயம்.

# நல்லூர் ஆலயச் சுற்றாடலில் விதிமுறை மீறல் படுமோசம்!

## மாநகராட்சியின் செயல்திறனின்மை காரணமாம்

வலி.வடக்கு,ஒக.27

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவகாலத்தில் இம்முறை விதிமுறைகள் மோசமாக மீறப்பட்டு, ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் அதிக சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகக் கூறப்படுகிறது. இதற்கு யாழ்.மாநகரசபையின் செயற்றிறன் இன்மையே காரணம் என்று கூறப்படுகிறது.

முன்னர் ஆலயச் சுற்றாடலில் வசிப்பவர்களுக்கு மட்டுமே - அதுவும் தீவிர விசாரணைகளுக்குப் பின்னரே - மாநகராட்சி அலுவலர்களால் வீதித் தடையைத் தாண்டி வாகனங்களைக் கொண்டுசெல்ல அனுமதி அட்டைகள் வழங்கப்படும். அதுவும் உற்சவநேரம் தவிர்ந்த நேரத்தில் மட்டுமே வாகனங்களைக் கொண்டுசெல்லலாம் என்ற நிபந்தனையுடனேயே அவை கடந்த காலங்களில் வழங்கப்பட்டன.

ஆனால், கடந்த சில வருடங்களாக இந்த நடைமுறை சிலரது வசதிகளுக்கேற்ப மாற்றப்படுவதால் ஆலயத்துக்கு வருவோர் சிரமங்களை அனுபவிக்க நேரிடுவதாகக் கூறப்படுகிறது. அதிலும் இம்முறை மாநகராட்சி உறுப்பினர்கள் சிலரின் விருப்பத்தின் பேரில் நல்லூர்ப் பகுதியில் குடியிருக்காதவர்களுக்கும் வாகனங்களை ஆலயப் பகுதிக்குக் கொண்டுசெல்ல அனுமதியளிக்கப்பட்டுள்ளதாம்.

ஆலயத்தின் ஒருபுற வீதியில் பயணிக்க வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தைக் கொண்டு மறுபுற வீதிக்கும் சிலர் பிரவேசிக்கின்றனர். வீதித் தடைகளில் கண்காணிப்புப் பணியில் உள்ள யாழ்.மாநகரசபை ஊழியர்களும் இதற்குத் தாராளமாக அனுமதி வழங்குவதாகப் பக்தர்கள் தெரிவித்தனர்.

இது ஒருபுறமிருக்க, நல்லூர் ஆலய உற்சவத்தில் ஆயுதம் தாங்கிய படையினர் சகிதம் தமிழ் அரசியல்வாதி ஒருவர் கலந்துகொள்வதையிட்டு பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததைப் போன்று, அதிகாலை 4மணிமுதல் இரவு 9மணிவரை ஆலய வெளிவீதிகளில் வாகனங்கள் செல்வது மற்றும் நடமாடும் வியாபாரங்களை மேற்கொள்வது போன்றவற்றைத் தடைசெய்யவேண்டுமென்று ஆலயத்துக்குவரும் அடியார்கள் விரும்புகின்றனர்.

இதேசமயம், ஆலயச் சுற்றாடலில் விரும்பத்தகாத நிகழ்வுகள் இடம்பெறக்கூடாது என்பதில் அதிக அக்கறை காட்டுபவர்களை நெருக்கடிக்குள்ளாக்க வேண்டுமென்பதற்காகவே விதிமுறை மீறல்கள் தூண்டிவிடப்படுவதாகப் பொதுமக்கள் கருதுகின்றனர்.

ஆகவே, விரும்பத்தகாத நிகழ்வுகள் இடம்பெறக்கூடாது என்பதில் அக்கறை காட்டுவோர் இதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்று மக்கள் விரும்புகின்றனர். (ஓ-86)

# குடாநாட்டு அபிவிருத்திக்கான ஆராய்ச்சி நிறுவனம் அமைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.27

குடாநாட்டின் அபிவிருத்தி தொடர்பாக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் குறித்து ஆராயத் திட்டமிட்டுள்ளதாகக் குடாநாட்டின் அபிவிருத்திக்கான ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

பொறியியலாளர் க.யோகராஜா இயக்குநராகக் கொண்ட இத்தனியார் நிறுவனம் நன்னீர் வளம், நிலத்தடிநீர் உவராவதைத் தடுத்தல், கரையோரப் பகுதிகளில் கடலரிப்பைக் கட்டுப்படுத்தல், காலநிலையால் கட்டடங்களில் ஏற்படும் பாதிப்புகள் போன்றவை குறித்து மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பதவி வகித்த அமரர் அ.துரைராசா உட்பட பல அறிவியலாளர்களது எண்ணங்களின் பிரதிபலிப்பாகவே இந்த ஆராய்ச்சி நிறுவனம் தொடங்கப்பட்டதாக இயக்குநர் க.யோகராஜா தெரிவித்தார். (ஓ-8)

## மந்திகை ஆஸ்பத்திரியின்

# சவச்சாலை விரைவில் புனரமைக்கப்படும்

தென்மராட்சி,ஓக.27

பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலையில் உள்ள சவச்சாலை விரைவில் புனரமைக்கப்படவுள்ளது.

வெளிநாட்டில் தங்கியுள்ள வடமராட்சியைச் சேர்ந்த ஒருவர் தனது சொந்தச் செலவில் புனரமைத்து வழங்க முன்வந்துள்ளார்.

இந்தச் சவச்சாலையின் ஜன்னல் கண்ணாடிகள் பலவருடங்களாக உடைந்த நிலையில் காணப்படுவதால், காகங்கள் மற்றும் ஈக்கள் சவச்சாலையில் வைக்கப்படும் சடலங்களை சேதப்படுத்துவதாகவும் - எனவே, சவச்சாலையைப் புனரமைத்துத் தருமாறு வடமராட்சி திடீர் மரண விசாரணை அதிகாரிகள் ஆஸ்பத்திரி நிர்வாகத்திடம் பல தடவைகள் கோரிக்கை விடுதிருந்தமை தெரிந்ததே. (எ-117)

## மணல் ஏற்றும் பணி தொடர்வதால்

# துன்னாலையில் உவராகும் நன்னீர் நீர் நிலைகள்

கரவெட்டி,ஓக.27

துன்னாலை - தம்பான் பகுதியில் சட்டவிரோத மணல் ஏற்றும் பணி தொடர்வதால் அப்பகுதியில் உள்ள நன்னீர் நீர் நிலைகள் உவர்நீராக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனைப் பிரதேச செயலரும், தமிழீழ விடுதலைப் புலிகளும் தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டுமென கிராம சேவகர், பொதுமக்கள் எழுத்துமூலம் மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

மேற்படி பகுதியில் இருந்து சட்டவிரோதமாகவும், இயற்கைக்கு முரணாகவும் தனியாரால் விற்பனைக்காக மணல் ஏற்றப்படுகின்றது என்றும் -

இதனைக் கிராம சேவகரும், அப்பகுதி மக்களும் தடுத்தும் உரிய நடவடிக்கை எடுக்கமுடியவில்லை எனக் கூறப்பட்டது. (எ-70)

### நாளை

ஆவணி 12
புதன்கிழமை
(28.08.2002)
திதி : பஞ்சமி
பிற்பகல் 1.10வரை.
நட்சத்திரம்: அச்சுவினி
மாலை 6.42 வரை.
சுபநேரம் : 4.35 - 6.05
ராகுகாலம்: 12.05 - 1.35
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

பணக்காரனோ ஏழையோ தனது வீட்டில் அமைதியை காண்பவனே உண்மையான இன்பத்தை அனுபவிக்கிறான்.

# தோப்புக்காட்டுப் பனைகள் கடற்படையினரால் தறிப்பு!

## கிராம முன்னேற்றச்சங்கம் முறைப்பாடு

வலி.மேற்கு,ஓக.27

காரைநகர் தோப்புக்காட்டில் மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னரும்கூட தொடர்ந்து கடற்படையினரால் அப்பகுதியில் பனைமரங்கள் தறிக்கப்படுவதாக முறையிடப்பட்டுள்ளது. கடந்த சில நாள்களாக தொடர்ச்சியாக நூறுக்கும் மேற்பட்ட பனை மரங்கள் தறிக்கப்பட்டு கடற்படையினரால் கொண்டுசெல்லப்படுவதாகவும் - இதனைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளும்படியும் -

தோப்புக்காடு கிராம முன்னேற்றச்சங்கத்தினர் இப்பகுதிக்கான கிராம உத்தியோகத்தரிடமும் உதவி அரசாங்க அதிபரிடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

காரைநகர்ப் பகுதியில் உள்ள தமது முன்னரங்கக் காவலரண்களைப் புதுப்பிப்பதற்காகவே பனை மரங்களை கடற்படையினர் தறித்து எடுத்துச்செல்வதாகத் தெரியவருகின்றது.

கடந்த 12 வருடங்களுக்குப் பின்னர் அண்மையில் மீளக்குடியமர்ந்த மக்கள் தமது காணிகளிலுள்ள பனை மரங்களை படையினர் தொடர்ந்து தறிப்பதையிட்டு பெரும் வேதனையடைந்துள்ளனர். (ஓ-175)

# காரைநகர்க் கடலில் மீனவர் குழுக்கள் மோதல்

காரைநகர்,ஓக.27

காரைநகர் தூம்பில்பிட்டி கடற்பகுதியில் காரைநகரைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கும், சுழிபுரம் பகுதி கடற்றொழிலாளர்களுக்குமிடையில் மோதல் இடம்பெற்றுள்ளது.

மீன்பிடிக்கும் கடற்பகுதிக்கான உரிமை தொடர்பாக இருதரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதமே கைகலப்பில் முடிவடைந்ததாகக் கூறப்படுகின்றது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இதில் காரைநகர்ப் பகுதியைச் சேர்ந்த இரு கடற்றொழிலாளர்கள் படுகாயமடைந்ததாகவும் -

இரு கட்டுமரங்கள் உட்பட ஒரு லட்சத்து 60ஆயிரம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் சேதமடைந்துள்ளதாகவும் -

தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக காரைநகர் வட.கிழக்கு கிராமசேவையாளர், விடுதலைப் புலிகளின் காரைநகர்ப் பகுதி அரசியல் துறையினர், கடற்படை அதிகாரி ஆகியோரிடம் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (ஓ-73)

# 2ஆவது தொகுதி மாணவருக்கு ஹோட்டல் பயிற்சி விரைவில்

யாழ்ப்பாணம்,ஓக.27

யாழ்.மாவட்ட ஹோட்டல் பயிற்சிப் பாடசாலையின் இரண்டாவது தொகுதி மாணவர்களுக்கான பயிற்சிகள் அடுத்தமாதம் ஆரம்பமாகவுள்ளதாக பாடசாலையின் உப அதிபர் ஏ.கதிர்காமலிங்கம் தெரிவித்துள்ளார்.

முதலாவது தொகுதி மாணவர்களின் பயிற்சிகள் இம்மாத இறுதியுடன் பூர்த்தியடைவதை அடுத்தே இரண்டாவது தொகுதி மாணவர்களின் பயிற்சிகள் ஆரம்பமாகவுள்ளன.

இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளபோதும் இதுவரையும் மிகக் குறைவான விண்ணப்பங்களே கிடைத்துள்ளதாகவும் -

தகுதியும் ஆர்வமும் உடையவர்கள் உடனடியாக விண்ணப்பிக்குமாறும் -

அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் 10 பாடசாலைகள் உள்ளபோதும் கொழும்பிலுள்ள பாடசாலையைத் தலைமையகமாகக்கொண்டே ஏனைய பாடசாலைகள் இயங்கிவருவதாகவும் -

இங்குள்ள பாடசாலையில் ஹோட்டல் வரவேற்பாளர் பயிற்சி மட்டுமே தற்பொழுது வழங்கப்பட்டு வருவதாகவும் -

எதிர்காலத்தில் அறைப் பராமரிப்பாளர் பயிற்சியும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சிகளின் பின்பு வழங்கப்படும் சான்றிதழ்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கு உதவியாக அமையும். பயிற்சியின்போது ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழிகளும் போதிக்கப்படும் என்றும் - உப அதிபர் தெரிவித்துள்ளார். (ஓ-10)

# ஊரெழுப் பாடசாலையில் 3ஆம் முறையாகத் திருட்டு

வலி.வடக்கு,ஓக.27

ஊரெழு கணேசா வித்தியாசாலையில் மூன்றாவது தடவையாக பெறுமதிமிக்க பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபரின் அலுவலக அறையின் கூரை மரங்களை வாளால் அறுத்து உள்ளே இறங்கியவர்களே இம்முறை பொருள்களை திருடியுள்ளனர்.

அதிபரின் அறையில் வைக்கப்பட்டிருந்த காஸ் சிலிண்டர், நீர் இறைக்கும் இயந்திரம், சுவர்க்கடிகாரம் உட்பட பல பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

ஏற்கனவே இப்பாடசாலையில் இரு தடவைகள் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். (ஓ-86)

சொலெக்ஸ் & லக்ஷறி

மூக்குக் கண்ணாடியகமும் பல்கட்டும் நிலையமும்

☆ உங்கள் கண்களைப் பரிசோதித்து முக அமைப்புக்கேற்ப கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும் -
☆ விழி இழந்தவர்களுக்கு சொந்தக் கண்களின் தோற்றத்திற்கு நிகரான மாபிள் கண்களைப் பெற்றுக்கொள்ளவும் -

மற்றும்

☆ மிதப்புப் பற்களுக்கு கிளிப் செய்து 3 மாதத்திற்குள் சீர்செய்து கொள்ளவும் -
☆ முத்துப்போன்ற சங்குப்பற்களை மிகவிரைவாகக் கட்டிக்கொள்ளவும

நாடுங்கள்:

SOLAX OPTICAL

LUXURY DENTAL WORK

(பழைய பிரதேச செயலகம் முன்பாக)

232A, கண்டி வீதி, சாவகச்சேரி.

(C/23292)


# முதலாம் ஆண்டு நினைவுகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 11 - 07 - 1937 | 08 - 09 - 2001 |

## கணபதிப்பிள்ளை பரஞ்சோதி

திதி: 27-08-2002

**அன்பாக ஆதரித்து எமை அரவணைத்து வளர்த்தெடுத்த எமது அன்புத் தந்தையின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.**

**- அன்பு மனைவி, பிள்ளைகள், உறவினர்கள்.**

நிரந்தர முகவரி:
கத்தா தோட்டம்,
நெல்லியடி வடக்கு,
வதிரி, கரவெட்டி.

தற்போதைய முகவரி:
இல.368, 5ஆம் படிவம்,
இராமநாதபுரம், கிளிநொச்சி.

(7284)

## வல்லிபுர ஆழ்வார் மஹோற்சவம்

செம்பியன்பற்று,ஒக.27

பிரசித்திபெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் வருடாந்த மஹோற்சவம் அடுத்த மாதம் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறவுள்ளது.

19ஆம் திகதி சப்பறத்திருவிழாவும், 20ஆம் திகதி காலை 9 மணியளவில் தேர்த்திருவிழாவும், 21ஆம் திகதி மாலை 2 மணியளவில் கடல் தீர்த்தமும் நடைபெறும்.

22ஆம் திகதி வியாழக்கிழமை காலை கேணித்தீர்த்தமும் நடைபெற்று மஹோற்சவம் நிறைவுபெறும். (எ-ரி)

## தேவாலயங்களுக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அப்பாத்துரை விநாயகமூர்த்தி, ஜி.ஜி.கஜேந்திரகுமார் ஆகியோர் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதியில் இருந்து கரவெட்டியில் உள்ள இரு தேவாலயங்களின் புனரமைப்புக்கு நிதியை ஒதுக்கீடு செய்துள்ளனர்.

புனித அந்தோனியார் ஆலயம், கரவெட்டி புனித மரியாள் ஆலயம் ஆகியவற்றுக்கே தலா ஒரு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்க் காங்கிரஸின் உபதலைவர் எஸ்.ஆனந்தராசாவின் வேண்டுகோளுக்கு இணங்கவே மேற்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (எ-ரி)

## நோய்த் தடுப்பு நடவடிக்கை

மருதங்கேணி, பருத்தித்துறை பகுதிகளில் கால்நடைகளுக்கு தொண்டை அடைப்பான் பரவுவதை தடுப்பதற்கு பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி எஸ்.வசீகரன் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

வன்னியிலிருந்து பெரும் எண்ணிக்கையான கால்நடைகள் வடமராட்சிப் பகுதிக்கு கொண்டுவரப்படுவதால் இந்த கால்நடைகள்மூலம் மேற்படி நோய் பரவுகிறது என்றும் -

இதனைத் தடுக்கும் வகையில் கால்நடை வளர்ப்போர் அவற்றுக்கு இலவசமாகத் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளவேண்டும் என்றும் - அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (எ-ரி)


PX உயர் சக்தி யூஎச் எப் வீஎச்எப் கலர் டீவி பூஸ்டர்




- ஹய் கெயின் 35 DB– பலவீனமான சமிக்ஞை பரப்பிலும் சிறந்த மின்னியக்கம்
- உயர் வலு 115 DB நிலைமாறும் சமிக்ஞை பரப்பொன்றிலும் உயர் திறன்
- அதி தாழ்வு ஒலி – தெளிவான கலர் படத்தை உருவாக்கும் உயர்திறன்
- உள்ளமைந்த கெயின் கொன்ரோல் தனித்தனி வீ.எச்.எம்/யூ.எச்.எவ் கெயின் கொன்ரோல்– இசைவிக்கக்கூடிய 0–10 D.B
- உள்ளமைந்த இன்புட் சிலெக்டர்

TV சென்டர்
4, கெய்ஸர் வீதி, கொழும்பு 11, தொ.பேசி: 434742
தொலைநகல் : 437687 மின் அஞ்சல்: tvcentre@eureka.lk

PX அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தாய்வான் தொழிற்சாலையால் உற்பத்தி செய்யப்பட்டது.


# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29 - 07 - 1928 | 08 - 08 - 2001 |

## அமரர் கந்தையா சுப்பிரமணியம்

திதி: 27-08-2002

**ஆண்டொன்று ஆனாலும் உங்கள் பசுமையான நினைவுகள் எங்கள் நெஞ்சை விட்டகலாது.**

12, நொத்தாரிஸ் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(7534)

அன்புடன் நினைவு கூரும்:
**குடும்பத்தினர்.**

# எம் நெஞ்சினின்றும் நீங்கா முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 27.12.1922

மறைவு: 07.09.2001

முதலியார் கனகசபை வீதி,
மானிப்பாய.

## அமரர்

## வேலுப்பிள்ளை சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

**(பிரபல வர்த்தகர் - மானிப்பாய்)**

திதி: 27.08.2002

**மலர்ந்த முகத்துடனும் மாசற்ற நெஞ்சுடனும்**
**நேசத்தால் எம்மை வசமாக்கி**
**மங்காத புகழோடு வாழ்ந்தாய் ஐயா!**
**ஆண்டு ஒன்று உருண்டுடோடினாலும்**
**என்றோ நீங்கள் ஏற்றி வைத்த தீபங்கள்**
**நாளும் பொலிவு பெற்று**
**இன்றும் பிரகாசித்துக்கொண்டு இருக்கின்றது.**
**குருவாய், தந்தையாய் எமக்கு வழிகாட்டிய குல தெய்வமே!**
**எம் உயிர் உள்ளவரை உள்ளத்தில் உம் உருவம்**
**உயிர் வாழும் ஐயா.**

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*தகவல்:*
S.திருவாஞ்சீஸ்வரன் V.S.K.
T.P.: 2546

(7331)

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், சகோதரர்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

# தாகத்தில் அலையும் சிறுவர்கள் மீது வானத்திலிருந்து குண்டு போட்டால்...

**விடுதலைப் புலிகள் அமைப்பினால் தற்போது சிங்கள மொழியில் "தேதுன்ன" என்ற பெயரில் பத்திரிகை ஒன்று வெளியிடப்படுகிறது. அதன் முதலாவது பதிப்பில் வன்னியில் இருக்கும் ஒரு தந்தை தென்பகுதியில் இருக்கும் தனது மகனுக்கு எழுதுவது போன்ற ஒரு கற்பனைக் கடிதம் வெளியிடப்பட்டுள்ளது. அதன் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

மருதநகர்,
கிளிநொச்சி.

அன்புள்ள மகன் காமினிக்கு,

நீண்டகாலத்தின் பின்னர் உனக்குக் கடிதம் எழுதக் கிடைத்ததையிட்டு மிகுந்த மகிழ்ச்சி. உண்மையில் கடந்த சில நாள்களாக எனக்கு அவ்வளவு சுகமில்லை. வயது வர வர சுகவீனமடைவது வழக்கம்தான். ஆனால், எனது மனம் மிகவும் சஞ்சலமடைகிறது. மகனே! தற்போது சமாதானம் வந்துவிட்டது. எனவே, அப்பா ஏன் முன்போல சஞ்சலப்படுகிறார்? என நீ நினைக்கக்கூடும்.

உண்மையில் சமாதானம் நல்லதுதான். எப்போதும்போல் எனது சிங்கள சகோதர - சகோதரிகள் கண்டி - யாழ்ப்பாண வீதியால் கிளிநொச்சி ஊடாக தங்குதடையின்றிச் செல்வதையிட்டு எனக்கு நல்ல சந்தோஷம்.

கிளிநொச்சியில் எங்கள் வீட்டுக்கு அருகே உள்ள வாய்க்கால் அருகில் வாகனங்களை (நான் பல

## மாற்றார் தோட்டத்திலிருந்து

வருடங்களாகக் காணாத புதிய ரக வாகனங்கள்) நிறுத்திக் குளித்து, வாகனங்களைக் கழுவி, சிலர் சமைத்துச் சாப்பிட்டுச் செல்வதைக் காணச் சந்தோஷமாக இருக்கிறது.

கடந்த மாரிகாலத்தில் பருவ மழை நன்கு பெய்ததால் எங்களது குளங்களில் நீர் நிறைந்துள்ளது. இதைப் பார்க்கும்போது எனக்கு நினைவுக்கு ஒரு விடயம் வருகிறது. அதாவது தண்ணீர் பஞ்சத்தால் அம்பாந்தோட்டைப் பகுதியைச் சேர்ந்த சிறுவர்கள் தண்ணீரைத் தேடி அலைந்ததாகப் பத்திரிகைகளில் வந்த செய்தி நினைவுக்கு வருகிறது. தண்ணீர் இருக்கிறதா எனக் கண்டறிய சிரட்டைகளால் அவர்கள் நிலத்தைத் தோண்டினராம்.

ஐயோ பாவம்! அந்தச் சிறுவர்களும் எங்களது வன்னிச் சிறுவர்களைப் போலவே உந்த நிவாரண வரிசைகளில் போய் நிக்கவேண்டியுள்ளதை நினைக்கும்போது மனதுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. தங்களது காணிகளில் தண்ணீர் இருக்குமானால் பயிர்செய்து தின்று குடிக்கலாம்தானே?

சின்னஞ்சிறுசுகள் தின்னக் குடிக்க வழியில்லாமல் கஷ்டப்படுவதைப் பார்க்கச் சகிக்காது. எனக்குச் சிறு வயதாக இருக்கும்போது அந்த 2 ஆம் உலக யுத்தம் காரணமாக அம்மா அப்பா ஏழையாக இருந்த காரணத்தால் இதேமாதிரி நான் பட்டினியில் கிடக்கநேரிட்டது. போன வருடம் எங்கள் வன்னியில் சிறுவர்கள் உணவின்றி நிவாரணத்தை மட்டுமே பெற்று ஓரளவு உயிர் வாழ்ந்தமை எனக்கு இப்போது நினைவுக்கு வருகிறது. அந்த நிவாரணமும் ஏனோதானோ என்றுதான் தந்தார்கள். இதையெல்லாம் எங்களால் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை. பெரியவர்கள் கொஞ்சப்பேர் சேர்ந்து இந்தச் சிறுசுகளுக்கு ஒருநேரச் சாப்பாடு என்றாலும் கொடுப்பதற்கு முழங்காவிலில் கூட்டம் ஒன்று நடத்தினோம். அன்று நடந்த சம்பவம் ஒன்று எனது ஞாபகத்திற்கு வருகிறது. அந்தச் சம்பவம் எனது மனதில் அழிக்கமுடியாத வடிவமாய் அமைந்துவிட்டது.

முழங்காவில் பகுதியைச் சேர்ந்த கிராம மக்கள் சிலர் ஒன்றுசேர்ந்து எங்களுடன் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்தனர். நாங்கள் அரிசி, உழுந்து, பயறு மற்றும் தேங்காய் ஆகியனவற்றைச் சிறிதளவாவது சேர்த்து சகல கிராமங்களிலும் காலையில் கஞ்சியாவது அல்லது வேறு பலகாரமாவது செய்து சிறுவர்களுக்குக் கொடுப்பது பற்றிக் கதைக்கும் நோக்கிலேயே கூடினோம். தூரவுள்ள கிராமங்களில் இருந்து சுமார் 300 பேர் இந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தனர். கூட்டம் முழுநாளும் நடைபெறும் என்பதால் கிராம அலுவலர் மற்றும் இரண்டு மூன்று ஆசிரியர்களுடன் கூட்டத்திற்கு வந்தவர்களுக்கு மத்தியானச் சாப்பாடு கொடுப்பதற்காக ஊரில் சேர்த்த அரிசி, தேங்காய், மரவள்ளி, கத்தரி, பூசணி ஆகியன அங்கு கொண்டுவரப்பட்டன. ஒருவர் எங்கோ சென்று சட்டி, பானைகளைக் கொண்டுவந்தார். ஒரு பக்கத்தில் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. மறுபக்கத்தில் 4 அல்லது 5 பேர் சேர்ந்து சமையலில் ஈடுபட்டனர். பகல் சாப்பாட்டிற்காக பகல் ஒரு மணிக்குக் கூட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. அதிக நேரம் இருந்தபடியால் முழங்காலில் உளைவு ஏற்பட்டது. எனவே, நான் வீதியில் இறங்கிச் சற்றுநேரம் நடந்தேன்.

வீதியின் மறுபக்கத்தில் ஒரு பாரிய பாலைமரம் ஒன்று இருந்தது. அந்த மரத்தின்கீழ் சுமார் 7 வயதுடைய கறுத்த நிறத்திலான ஒரு சிறுவன் காணப்பட்டான். தனது தாயின் கர்ப்பப்பையில் இருந்தது போலவே மடங்கியவாறு மரத்தில் சாய்ந்து நித்திரை கொண்டவாறு இருந்தான்.

தம்பி காமினி! முழங்காவில் என்பது கிளிநொச்சிக்கு மேற்கே பூநகரி பாதையில் அமைந்துள்ள ஒரு சிறு கிராமமாகும். வேணன் அபேசேகரா என்பவர் யாழ்ப்பாண அரச அதிபராக இருந்தபோது அவரால் உருவாக்கப்பட்டதே இந்த முழங்காவில் என்ற சிறு கிராமமாகும். முழங்காவிலில் உள்ள மண் செம்பாட்டு நிறத்தையுடையது. சரியாக 1990ஆம் ஆண்டுப் பகுதியில் இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டு இன்றும் மீளக்குடியமர முடியாத பலாலியை அண்டிய பகுதிகளில் உள்ள மண்ணைப் போன்ற நிறத்தையும் செழிப்பையும் கொண்டது. பலாலி மற்றும் வசாவிளான் பகுதியில் இருந்து நான் அப்பாவுக்கு இராசவள்ளிக்கிழங்கு அனுப்பியது உனக்கு ஞாபகத்தில் இருக்கும் என நினைக்கிறேன்.

எனது மனதை விட்டு அகலாத அந்தச் சிறுவனின் உடலில் முழங்காவில் பகுதியில் எழும் அந்த சிவப்பு தூசி படிந்திருந்தது. "தம்பி" என நான் கூப்பிட்டேன். சிறுவன் நித்திரையா அல்லது விழித்திருந்தானா என எனக்குத் தெரியவில்லை. ஆனால், "சாப்பாடு கொடுக்கிறாங்களா" என்ற குரல் மட்டும் எனது காதுக்குக் கேட்டது. வயிற்றில் நெருப்பைக் கொட்டியது போன்ற உணர்வு ஏற்பட்டது. "இங்கு கூட்டம் ஒன்று நடக்கிறது. கூட்டத்திற்கு வந்த ஆளகளுக்கு சாப்பாடு தயாரிக்கின்றனர். ஆனால், அது வெளியாள்களுக்கு அல்ல" என நான் சிறுவனிடம் கூறினேன்.

அப்போது வேறு இரண்டு, மூன்று சிறுவர்கள் அந்த இடத்திற்கு வந்தனர். அவர்களும் அந்தச் சிறுவனைப் போலவே காணப்பட்டனர். நான் அந்தச் சிறுவனிடம் "எந்த ஊர்?, அம்மா அப்பா எங்கே?" எனக் கேட்டேன். "நாங்கள் யாழ்ப்பாணத்திலுள்ள நாவற்குழியைச் சேர்ந்தவர்கள். சூரிய கதிர் (ரிவிரச) இராணுவ நடவடிக்கை காரணமாக அப்பா, அம்மா, நான், தங்கைமார், தம்பிமார் எல்லோரும் நாச்சிக்குடா வந்தோம். அப்பா ஊரில் கமவேலை செய்தார். இங்கு நாச்சிக்குடா கடற்கரையிலுள்ள வாடியில் கருவாடு காயவைக்கும் கூலிவேலை செய்தார். ஒருநாள் அந்தக் கடற்கரையில் ஹெலி தாக்குதல் நடத்தியது. அப்பா அந்த இடத்திலேயே இறந்துவிட்டார்" என அந்தச் சிறுவன் கூறினான்.

"தம்பி நீ சின்னப் பொடியன். உந்த 'சூரியகதிர்' நடவடிக்கை பற்றி எல்லாம் உனக்கு எப்படித் தெரியும்" என நான் கேட்டேன்.

"ஏன் கூப்பன் கடைக்கு நிவாரணம் எடுக்கப்போனால், எங்கடை நிவாரண மட்டையைப் பார்த்துவிட்டு 'ரிவிரச' ஆள்கள் அங்கே நில்லுங்கள், 'சத்ஜெய' ஆள்கள் இங்கே நில்லுங்கள், 'ஜயசிகுறு' ஆள்கள் அங்கே போங்கள் என்று சொல்லுகினம். நான் எப்போதும் 'ரிவிரச' வரிசையில்தான் நிற்பேன்" என அந்தச் சிறுவன் கூறினான்.

ஐயோ மகனே, ஆள்கள் சொந்த இடங்களை இழந்தபோதுகூட சந்திரிகா அரசு சும்மா இருக்கவில்லை. அவற்றிற்கு கௌரவப் பெயர்களைச் சூட்டியே (இராணுவ நடவடிக்கையின பெயர்கள்) அவர்களது இடங்களை விட்டு விரட்டியது. அப்படி இடம் பெயர்ந்தவர்கள்தான் 'ரிவிரச ஆள்கள்', 'சத்ஜெய ஆள்கள்' மற்றும் 'ஜெயசிகுறு ஆள்கள்'.

இராணுவ நடவடிக்கைகள் நாள், நட்சத்திரம் பார்த்து மந்திரிச்ச நூல் கைகளில் கட்டித்தான் ஆரம்பிக்கப்படுகின்றன எனக் கேள்விப்பட்டேன். இராணுவ நடவடிக்கைக்கு சாத்திரம் பார்த்துத்தான் பெயர் சூட்டப்படுகிறதாம். அந்த இராணுவ நடவடிக்கை காரணமாக அகதிகளாக இடம்பெயருவோருக்கும் அந்த நடவடிக்கையின் பெயரே சூட்டப்படுகிறது.

மகனே, உன்னைப்போல் பெறுமதிவாய்ந்த சிங்கள இளைஞர்கள் உந்த நாள், நட்சத்திரம் பார்த்துத்தான் கொல்லக் கொண்டுவரப்படுகிறார்கள்.

சாத்திரம் பார்த்துத் தொடங்கப்படும் இராணுவ நடவடிக்கைகளில் காணாமற்போய்விட்டனர் எனக் கூறப்படும் சிங்கள இளைஞர்களைத் தேடி தற்போதும் அவர்களது தாய், தகப்பன்மார்கள் சாத்திரம் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். மகனே! இது என்ன அநியாயம். சிங்கள இளைஞர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மைகளைக் கூறாத மேல்வர்க்கத்தினர் வன்னியிலுள்ள எங்களைப் பற்றிய உண்மைகளைக் கூறுவார்களா? நான உண்மையைக் கூறுகிறேன். உப்பிடி ஒருவரும் காணாமற்போகவில்லை. உங்குள்ள பெரியாள்கள் சிங்கள இளைஞர்களின் உடல்களை அதிகமாகப் பொறுப்பேற்பதில்லை. நாள் நட்சத்திரம் பார்த்து இராணுவ நடவடிகையைத் தொடங்குவதால் தமிழ்மக்கள் அகதிகளாகிறார்கள். நாள் நட்சத்திரம் பார்த்து சிங்கள இளைஞர்கள் காணாமற்போகிறார்கள்.

மகனே! எனது மனம் மிகவும் குழம்பியிருந்தது. சந்திரிகா அம்மையாரும், தமிழரான அமைச்சர் கதிர்காமரும் எமது தமிழ் சிறுசுகள் பற்றி உலகம் முழுவதும் சென்று என்ன கூறுகிறார்கள், தமிழ் சிறுவர்கள் விடுதலைப் புலிகளால் போராளிகளாக்கப்படுகிறார்களாம். புலிகள் சிறுவர்களின் கல்வியைக் குழப்புகிறார்களாம். அப்படி என்றால் இந்தச் சிறுவனின் குடும்பத்தைப்போல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்ந்த அவர்களது சொந்த இடங்களில் வானிலிருந்து, கடலிலிருந்து, இராணுவ முகாம்களிலிருந்து குண்டுகளை வீசி அவர்களை அநாதைகளாக்கி - செய் தொழிலை இழக்கச்செய்து - இடத்துக்கிடம் சென்று பிச்சை எடுக்கும் நிலைமை உருவாக்கியதை நாங்கள் என்னவென்று கூறுவது என எனக்குப் புரியவில்லை மகனே.

## தமிழில்: கஜனி

நான் மீண்டும் கூட்டம் நடக்கும் மண்டபத்திற்குச் சென்றேன். கிராம அலுவலர் எனக்குச் சாப்பாட்டு பார்சல் ஒன்றைத் தந்தார். தலையில் இருந்த பாரம் யாவும் தற்போது வயிற்றில் இறங்கியிருந்தன. நான் பார்சலை விரித்தேன். ஆனாலும் என்னால் சாப்பிடமுடியவில்லை.

இந்தப் பார்சலை அந்தச் சிறுவனிடம் கொடுப்போமா? என்ற எண்ணம் தோன்றியது. ஆனால், இந்த ஒரு பார்சலை ஒரு சிறுவனுக்குக் கொடுப்பதன்மூலம் தீவிரமாகியுள்ள வன்னிச் சிறுவர்களின் பசிப்பிணியைப் போக்கமுடியுமா? என ஒரு கணம் மனது நினைக்கிறது. ஆனால், பரவாயில்லை கொடு என எனது நெஞ்சம் கூறுகிறது.

நான் சாப்பிடுவதாகப் பம்மாத்துப் பண்ணிக்கொண்டிருந்தேன். சுற்றுமுற்றும் பார்த்தேன். எவரும் என்னை கவனிக்கிறார்கள்போல் தெரியவில்லை. பார்சலை மடித்தேன்; கார்சட்டைப் பைக்குள் பார்சலைத் திணித்தேன். எவருக்கும் தெரியாமல் அந்தப் பாலை மரத்தை நோக்கிச் சென்றேன். அந்தச் சிறுவன் அப்போது விழித்திருந்தான். ஆனாலும், என்னை உற்று நோக்குவதாகத் தெரியவில்லை. காரணம் நான் வெறும் கையுடன் போனதாக அவன் நினைத்திருக்கக்கூடும். கார்சட்டைப் பைக்குள் கையை விட்டுப் பார்சலை வெளியே எடுத்து அந்தச் சிறுவனிடம் நீட்டினேன். அதை அண்மையில் இருந்த ஏனைய இரு சிறுவர்களும் கவனித்தனர். இந்தச் சிறுவனைவிட அவர்கள் இருவரும் வயதில் சற்றுக்கூடியவர்கள். இருப்பினும் அவர்கள் பிடுங்கிச் சாப்பிடமுனையவில்லை.

எனக்குச் சிறுவயதாக இருக்கும் போது யுத்தம் காரணமாக அதாவது 2ஆவது உலக யுத்தம் காரணமாக பஞ்சம் நிலவியது; பட்டினி கிடந்தாலும் எவரிடமிருந்தும் பிடுங்கித் தின்னக்கூடாது என எனது அம்மா கூறியது எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. பார்சலை வாங்கிக்கொண்ட அந்தச் சிறுவன் எனக்கு வாயால் நன்றி கூறவில்லை; கையசைத்தும் நன்றி கூறவில்லை. ஏன் தெரியுமா? பட்டினியால் வாடியிருந்த அந்தச் சிறுவனின் வாயும் கையும் அப்போது தான செயற்பட ஆரம்பித்தன. மகனே அவ்வளவு தூரம் அந்தச் சிறுவனுக்குப் பட்டினியாயிருந்தது. அந்தச் சிறுவன் எனக்கு நன்றி கூறவில்லை என்று நீ நினைக்கிறாயா மகனே? இல்லை... இல்லை... அவனது கண்களில் ஓர் ஒளி வீசியது. அதுதான் அவன் செலுத்திய நன்றியறிதல். மகனே இதைத்தானே நாங்கள் மனிதநேயம் என்கிறோம் அல்லது சிறுவர்களின் உரிமைகள் குறித்து முதலைக் கண்ணீர் வடிப்பதை மனிதநேயம் எனக் கூறமுடியுமா? இதை யாரிடம் கூறுவது.

அந்த நேரத்தில் அந்த இரு கண்களில இருந்து எனது இருகண்களுக்கும் பாய்ச்சப்பட்ட அந்த ஒளி எனது நெஞ்சத்தைத் தொட்ட நிறைவோடு கூட்டத்திற்குச் சென்று நடந்த விடயத்தைக் கூறினேன்.

அரசு செய்தாலும் சரி விட்டாலும் சரி, நாங்கள் இதைச் செய்வோம். வெளிநாடுகளிலுள்ள எமது உறவினர்களுக்கு எழுதி கொஞ்சப் பணத்தைப் பெறுவோம். இந்தச் சிறுவர்களுக்கு, காலை வேளையிலாவது ஒரு கோப்பை கஞ்சியாவது கொடுப்போம் எனத் தீர்மானித்தோம்.

அம்பாந்தோட்டையில் சிறுவர்கள் தண்ணீரைத் தேடி அலையும், இங்கும் அலையும் காட்சி எனது ஞாபகத்திற்கு வந்தது. சிரட்டைகளால் நிலத்தைத் தோண்டி தண்ணீரைத் தேடும் காட்சியைக் கண்டதும் இவை அனைத்தும் நினைவுக்கு வருகிறது.

காமினி! சற்றுச் சிந்தித்துப் பார். தாகத்திற்குத் தண்ணீர் தேடி அலையும் சிறுவர்களின் மீது வானில் இருந்து குண்டுகளை வீசினால் எப்படி இருக்கும். இங்குள்ள சிறுவர்களுக்கு அந்த நிலை ஏற்பட்டது. எனது மனம் சஞ்சலம் அடைந்தது என ஏற்கனவே கூறினேன் அல்லவா? இதுதான் அதற்குக் காரணம் இதை எல்லாம் கூற ஆரம்பித்தால் காமினி, இவற்றிற்கு முடிவே இல்லை. எனது தலையில் அவ்வளவு பாரம் உள்ளது மகனே. எல்லாவற்றையும் ஒரே தடவையில் எழுதுவது கஷ்டம். மேலும் தற்போது யுத்தநிறுத்த உடன்பாடு எனக் கூறப்படுகிறது. இதன் மூலம் அரசியல் தீர்வு கிடைக்குமா என எனக்குத் தெரியாது. இருந்தாலும் மனிதர்கள் சுதந்திரமாக அங்கும் இங்கும் செல்வதை அவதானிக்க முடிகிறது. பகல் நேரத்தில் ஏ-9 வீதியால் போக்குவரத்து நெருக்கடிகளைத் தணிக்க காவல்துறையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவ்வளவுக்குப் போக்குவரத்து நெருக்கடி. பிள்ளைகள் பாடசாலைகளுக்குச் செல்கின்றனர். ஆனால், பாடசாலைக் கட்டடங்களைப் பற்றிச் சொல்லிவேலையில்லை. கூரை இல்லை, வாங்குகள் இல்லை, வகுப்பறைகளுக்குச் சுவர்களே இல்லை.

## வன்னியில் இருந்து தெற்குக்கு ஒரு கடிதம்

மகனே, இப்போது இரவில் முன்பு போல் இல்லை, இப்போது எங்கள் முற்றத்தில் இருந்துகொண்டு எதுவித அச்சமுமின்றி வானத்தில் நட்சத்திரங்களைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம். பல காலத்திற்குப் பின்னர் நிலா வெளிச்சத்தில் பிள்ளைகள் விளையாடுகிறார்கள். என்றாலும் அப்படி இருக்கும்போது சந்தோஷத்தைப் பூரணமாக அனுபவிக்கமுடியவில்லை. இந்த மண்ணில் எங்களுக்கு இப்படிச் சுதந்திரமாக இருக்க வழி அமைத்து தங்கள் உயிரைத் தியாகம் செய்த எமது பிள்ளைகுட்டிகளின் நினைவு வருவதே இதற்குக் காரணமாகும்.

இது சுதந்திரம்தான். ஆனாலும், இது மட்டுமா சுதந்திரம். உண்மையான சுதந்திரம் என்பது தத்தமக்குரிய வாழ்விடங்களில் எதுவித தொல்லைகளுமின்றி, அச்சமோ சந்தேகமோ இன்றி தமக்கு பழக்கப்பட்ட சூழ்நிலையில் வயல் நிலங்களை உழுது, மீன் பிடித்து தமக்குரிய தொழிலை மேற்கொண்டு கௌரவமாக வாழ்வது அல்லவா சுதந்திரம்?

சுதந்திரம் என்பது பெரும்பான்மை மக்கள் சிறுபான்மை மக்களுக்கு சலுகையாக வழங்கும் ஒன்றல்ல. அது அனைவரதும் பிறப்புரிமை. அம்பாந்தோட்டையில் மக்கள் ஏன் வரிசையில் நிற்கிறார்கள். விவசாயிகளுக்குப் பயிர் செய்கைக்கு தண்ணீர் இருக்குமானால் காமினி உனக்கு விளங்கும்தானே. எங்கள் பாட்டுக்கு நாங்கள் நிலத்தை உழுது - எங்கள் கடல் எல்லைக்குள் மீனைப் பிடித்து - எமது பிள்ளைகள் படையினரின் கெடுபிடிகள் இன்றி பாடசாலை, கோயில், தேவாலயம் ஆகியவற்றிற்குச் சென்றுவர சுதந்திரம் இருக்குமாயின், எங்களுக்கு ஏன் நிவாரண வரிசை.

தற்போது பாதை திறக்கப்பட்டுவிட்டது. காலையில் இருந்து மாலை வரை பஸ்கள் செல்லுகின்றன. ஒரு நாளைக்கு இங்கு வந்துபோ. வாய்க்காலுக்கு அருகே இருந்து பருத்தித்துறை கடற்கரையில் மீன்கறி சமைத்தது பற்றி நாங்கள் கதைத்ததை நீ கேட்டிருப்பீர்தானே. அதே மாதிரி நாங்கள் இருவரும் விளைமீன் குழம்புடன் இடியப்பம் சாப்பிட்டு வேண்டியமட்டும் கதைப்போம். நீ வந்தால் இங்கிருந்து திரும்பும்போது மெண்டிஸ் அப்புக்கு பருத்தித்துறைக் கருவாடும் நெல்லியடிப் புகையிலையும் கொண்டுபோகலாம்.

அன்புள்ள,
அப்பா.

# படையினரும் புலிகளும் ஒரே வளாகத்தில்

யாழ்ப்பாணம்,ஓக.27

ஒரே காணிக்குள் உள்ள இரண்டு வீடுகளில் ஒன்றில் விடுதலைப் புலிகளின் மகளிர் பிரவினரும் மற்றைய வீட்டில் இராணுவத்தினரின் உறவினர்களும் தங்கியிருக்கின்றனர்.

யாழ்ப்பாணம் கோயில் வீதியில் உள்ள ஓர் இடத்திலேயே சிங்களக் குடும்பம் ஒன்றும் புலிப்போராளிகளும் அருகருகே தங்கியுள்ளனர்.

குறிப்பிட்ட குடும்பத்தின் அங்கத்தவர்கள் இருவர் இலங்கை இராணுவத்தில் பணியாற்றுகின்றனர். அவர்களில் ஒருவர் இராணுவ அலுவலராக உள்ளார். மற்றையவர் சிப்பாயாகப் பணியாற்றுகின்றார். அவர்கள் இருவரையும் காண்பதற்காகவே அந்தக் குடும்பம் கொழும்பில் இருந்து இங்கு வந்ததாகக் கூறப்படுகிறது.

அங்கு தினமும் இராணுவத்தினர் வந்து அந்தக் குடும்பத்தினருடன் உரையாடிச் செல்கின்றனர்.

மாலை வேளைகளில் அந்த சிங்களக் குடும்பம் தங்கியுள்ள வீட்டு வாசலில் இராணுவத்தினர் வட்டமாக இருந்து தமக்குள் உரையாடிக் கொண்டிருப்பதையும் -

புலிகளின் பெண் போராளிகள் தாம் தங்கியுள்ள வீட்டுவாசலில் அமர்ந்து உரையாடுவதையும் - காணமுடிகிறது. ஒரே காணிக்குள் அருகருகே இருக்கும் இரண்டு வீடுகளில் இராணுவத்தினரும் புலிகளும் அமர்ந்து உரையாடுவதை அவ்வீதி வழியே செல்லும் மக்கள் ஆர்வமாய்ப் பார்த்துச் செல்கின்றனர். (ஓ-4)

# வீட்டுத்தோட்டம் அமைக்க வறிய குடும்பங்களுக்கு உதவி

குடாநாட்டிலுள்ள வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் அவர்கள் தமது இருப்பிடங்களில் சிறிய அளவிலான தோட்டங்களை அமைப்பதற்கு விவசாயத் திணைக்களம் உதவிவழங்க நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றது.

வீட்டுத் தோட்டம் அமைக்கும் இந்தத் திட்டம் மனித முன்னேற்ற நடு நிலையத்தின் ஆதரவுடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

வறிய குடும்பங்களுக்கு இந்த வீட்டுத்தோட்டங்களை அமைப்பது குறித்த விளக்கங்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்குவதுடன் அதற்குத் தேவையான விதைகள் மற்றும் சிறு உபகரணங்களும் வழங்கப்படவிருக்கின்றன.

இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுவிட்டதாகவும் -

கிராம சேவகர் பிரிவு ரீதியாக விரைவில் வீட்டுத்தோட்ட உபகரணங்கள் மற்றும் விதைகள் என்பன வழங்கப்படவிருப்பதாகவும்- தெரிவிக்கப்பட்டது. (ஓ-4)

## வடமராட்சி கிழக்கில் நுளம்பு வலைகள் விநியோகம்

தென்மராட்சி,ஓக.27

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மீளக்குடியமர்ந்துவரும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு மலேரியாக் காய்ச்சல் ஏற்படாதிருக்க பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் நுளம்பு வலைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

கடந்தவாரம் இப்பகுதிகளுக்குச் சென்ற சுகாதார உத்தியோகத்தர்கள் 800 நுளம்பு வலைகளுக்கு நோய்த் தடுப்பு மருந்தான 'பெமத்திரின்' கலவையினை நனைத்து வழங்கியதாக சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் என்.ஞானசுதன் தெரிவித்தார். (எ-117)


**தேவை**

தொலைத் தொடர்பு நிறுவனமொன்றில் பணிபுரிவதற்கு பெண் ஒருவர் தேவை.
(முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.)
30.08.2002ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல. 1614,
C/o உதயன், யாழ்ப்பாணம். (7545)

**தேவை**

கொம்பியூட்டர் ரைப்செற்றிங் தெரிந்த பெண்கள் தேவை.
நேரில் வரவும்.
BHARATHI PATHIPPAKAM
OFF-SET PRINTERS
430, K.K.S. ROAD, JAFFNA.
PHONE: 021-3081 (C/23295)


## சேவைநலன் பாராட்டு



யாழ்.கல்வி வலயத்தின் வர்த்தக பாட முதன்மை ஆசிரியையும், எமது பலாலி ஆசிரிய கலாசாலையின் பகுதிநேர விரிவுரையாளருமாகிய

**செல்வி நாகரத்தினம் வேலுப்பிள்ளை**

அவர்கள் தமது அறுபதாவது அகவையை நிறைவுசெய்யும் காலத்தில் அவரது சேவையைப் பாராட்டுவதோடு, மேலும் பல்லாண்டு காலம் சீரும், சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

வணிகமன்றம்,
பலாலி ஆசிரிய கலாசாலை 2001/2002.
(7561)

## கண்ணீர் அஞ்சலி



நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்தவரும் காலஞ்சென்ற பிரபல கணித ஆசிரியர் திரு.சி.மகாராஜா அவர்களின் அன்பு மகனுமான

**அமரர் ம.மகாசெபம்**

அவர்கள் 25.08.2002 அன்று அகால மரணமான செய்தி அவரோடு நெருங்கிப் பழகிய எமக்கெல்லாம் மிகுந்த துக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். அவரது குடும்பத்தவர், உற்ற சுற்றத்தவர்களது துயரத்தில் நாமும் பங்குகொள்வதுடன் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

310, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். (7566) - நண்பர்கள்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பட்டமளிப்புவிழா - 2002

### வீடியோ, புகைப்படம் பிடித்தல்

யாழ்.பல்கலைக்கழகத்தின் 22ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா எதிர்வரும் 2002.10.12ஆம் திகதி நடைபெறவுள்ளது. இவ்விழா நிகழ்வை வீடியோப்படம் எடுப்பதுடன், 1000 புகைப்படங்கள்வரை (4R அளவுள்ள கலர்ப்புகைப்படம்) எடுக்கவேண்டியுள்ளதால், தகுதி வாய்ந்த வீடியோப் படப்பிடிப்பாளர்கள், புகைப்படப் பிடிப்பாளர்கள் தங்களது விலைக்கூற்றை 2002.09.05ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ *உதவிப்பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்* என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். பட்டமளிப்புவிழா நிகழ்வின்போது வீடியோப் படப்பிடிப்பாளர் மின் பிறப்பாக்கி (ஜெனரேற்றர்) கொண்டுவருதல் வேண்டும்.

தெரிவுசெய்யப்படும் வீடியோப் படப்பிடிப்பாளர் மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 5000/- பல்கலைக் காசாளரிடம் செலுத்தி பற்றுச் சீட்டினை உதவிப்பதிவாளர், கல்விக்கிளையிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
26.08.2002 (C/23305)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
30 ★ 08 ★ 1925



உதிர்வு
28 ★ 07 ★ 2002

**அமரர் நல்லதம்பி நடராசா**

*(ஓய்வுபெற்ற தபால் விநியோகிப்பவர் - காங்கேசன்துறை)*

திதி: பூர்வபக்க சதுர்த்தி

*ஆறுதல் சொல்ல யாரிருந்தென்ன - உன்*
*ஆருயிர் அன்பிற்கு ஈடாகுமா?*
*தேறுதல் சொல்ல தெய்வமே வந்தாலும் - உன்*
*திருமுகம் ஒருதரம் பார்த்தால் போதாதோ எமக்கு?*
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்!

- திருமதி நடராசாவும் குடும்பத்தினரும்.

*கலட்டி வீதி,*
*கோண்டாவில் மேற்கு.*
*கோண்டாவில்.* (7558)

*கலைமகள் வீதி,*
*நைபிட்டி - காங்கேசன்துறை.*

# கேள்வி அறிவித்தல்

## வலயக் கல்வி அலுவலகம் - வலிகாமம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான கேள்விகள் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரினால் 2002ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 06ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றையதினமே மு.ப. 10.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொ.இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படாத வைப்புப்பணம் | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் |
|---|---|---|---|
| 01. | வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம் பெருந்திருத்த வேலைகள். | 100/- | 500/- |

01. மேற்படி வேலைக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தின் எம் 09ம் அதற்கு மேற்பட்ட தரத்திற்கும் பதிவுசெய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்களாவர்.

02. தற்போது ஜி.எஸ்.ரி. 12 1/2% வரி நீக்கப்பட்டுள்ளது. இதற்குப் பதிலாக புதிய வரி ஏற்பாட்டை அரசாங்கம் தீர்மானிக்கவுள்ளது. இதனால் ஒப்பந்தகாரருக்கு உரிய கொடுப்பனவு புதிய வரி கணிப்பீட்டுக்கு அமைவாக இருக்கும் என்பதனைத் தாங்களுக்கு அறியத்தருகின்றேன்.

03. வேலைக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட கேள்விப் பணத்தை வலிகாமம் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து கேள்விப்பத்திரங்களை 27.08.2002ஆம் திகதியிலிருந்து 30.08.2002ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வலிகாமம் கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

04. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்திசெய்யப்பட்டு மூலப்பிரதியுடன் எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும், கேள்விப்பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டுக் கடித உறைகளின் இடதுபுற மேற்பக்கத்தில் வேலையின் விபரமும் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையில் இட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தக்காரரின் முத்திரை இடப்பட்டு மருதனார்மடத்திலுள்ள வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2002ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட காலநேரத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

05. தெரிவுசெய்யப்படும் ஒப்பந்தகாரர் தெரிவுசெய்யப்படும் திகதியிலிருந்து 3 மாத காலத்திற்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்திசெய்து கையளித்தல் வேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத, பிழைகள்கூடிய, தெளிவற்ற கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களையும், பாடசாலை கட்டடப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறியத்தருகின்றோம்.

*மருதனார்மடம்,*
*சுன்னாகம்.*
*27.08.2002* (C/23306)

**வீ.இராசையா,**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**வலிகாமம்.**

# இலங்கைப் பணிப் பெண்ணுக்கு குவைத்தில் நேர்ந்த கொடூரம்!

## அவரின் மரணம் குறித்த விசாரணைக்கு வலியுறுத்து

கொழும்பு,ஓக.27

குவைத் நாட்டில் வீட்டுப் பணிப் பெண்ணாகக் கடமைபுரிந்த இலங்கைப் பெண் ஒருவரின் உடல் உறுப்புகளில் சிலவற்றை அவரது குடும்பத்தவரின் சம்மதமின்றி சத்திர சிகிச்சைமூலம் பிரித்தெடுக்கப்பட்டதில் அவர் உயிரிழந்ததாகக் கூறப்படுவது குறித்து உடனடி விசாரணை மேற்கொள்ளவேண்டுமெனப் பெண்கள் விவகார அமைச்சர் அமரா பியசீலி ரத்நாயக்கா வலியுறுத்தியுள்ளார்.

குவைததில் பணிப் பெண்ணாகப் பணியாற்றிய சோமலதா சதரசிங்க (வயது 41) என்ற பெண்ணின் சடலம், கண் விழிவெண்படலம், சிறுநீர்ப்பை, சிறுநீரகம் உட்பட சில உறுப்புகள் பிரித்தெடுக்கப்பட்ட நிலையில் கடந்த 16ஆம் திகதி இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

"இது மிகவும் கவலைக்குரிய விடயம். இதுபோன்று இனிமேலும் இடம்பெற இடமளிக்க முடியாது. எனவே, இதுசம்பந்தமாக உடனடியாக மேல் நடவடிக்கை எடுக்கவேண்டும்" என அமைச்சர் அமரா பியசீலி ரத்நாயக்க, தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெனான்டோ ஆகியோருடன் கலந்துரையாடியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அப்பெண்ணின் சகோதரராகிய சந்திரலால் சதரசிங்க தெரிவிக்கையில்:-

"தனது சகோதரியின் சம்மதத்துடன்தான் இவ்வாறு நடைபெற்றதாகக் கூறும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம், அதற்கான எழுத்துமூலசான்றுகள் எதுவும் தம்மிடம் இல்லை எனத் தெரிவித்துவிட்டதாகவும் கூறினார்."

எனினும், இது தொடர்பாக குவைத நாட்டுச் சட்டத்திற்கு அமையவே சத்திரசிகிச்சை மூலம் அப்பெண்ணின் உடல் உறுப்புகள் பிரித்தெடுக்கப்பட்டதாக இலங்கைக்கான குவைத் தூதுவர் அறிவித்துள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சின் அலுவலகப பணிப்பாளர் நாயகம் காமினி காரியவசம் தெரிவித்துள்ளார்.

குவைத் நாட்டு சுகாதார அமைச்சரின அனுமதியுடன் குவைத்தைச் சேர்ந்த ஒரு நோயாளிக்குப் பொருத்துவதற் காகவே சத்திரசிகிச்சை மூலம் சோமலதாவின் உடல் உறுப்புகள் பிரித்தெடுக்கப்பட்டதாகவும் -

இதற்கான நஷ்ட ஈடாக குவைத் நாணயமான 3 ஆயிரத்து 900 டினார்கள் இறந்த பெண்ணின் உறவினருக்கு வழங்கப்பட்டதாகவும் -

குவைத் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

ஆயினும், சோமலதாவின் மரணம் குறித்து பல சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன.

உடல் உறுப்புகள் பிரித்தெடுக்கப்பட்ட பின்னர் வேறு காரணத்தால் அவர் இறந்தாரா? அல்லது உடல் உறுப்புக்களைப் பிரித்தெடுத்ததினாலேயே அவர் உயிரிழந்தாரா? அல்லது குவைத் நோயாளிக்குத் தேவையான உறுப்புகளைப் பெற்றுக்கொள்வதற்காக சோமலதா பலிக்கடா ஆககப்பட்டாரா? என்றெல்லாம் இலங்கையிலுள்ள அவரது உறவினர்களால் கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

இந்த நிலைமையில், இத்தகைய துயரச்சம்பவங்கள் இனியும் தொடர அனுமதிக்கமுடியாது என்றும் -

இது தொடர்பாக முறையான விசாரணை மேற்கொண்டு சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் -

பெண்கள் விவகார அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். (ஒ-ரி)

## மாதகல் மேற்கில் உள்ள வீடுகளைப் பார்வையிட உடன் அனுமதி வழங்குக

### அப்பகுதி மக்கள் படையினரிடம் கோரிக்கை

சண்டிலிப்பாய்,ஓக.27

மாதகல் மேற்குப் பகுதியிலுள்ள தங்கள் வீடு, வாசல்களை நேரில் சென்று பார்வையிட உடன் அனுமதி வழங்குமாறு அப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியிருக்கும் மக்கள் பொன்னாலையிலுள்ள கடற்படை முகாம் பொறுப்பதிகாரியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இராணுவ நடவடிக்கை காரணமாகக் கடந்த 12 வருட காலமாக மாதகல் மேற்குப் பகுதியிலுள்ள மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்று வசித்து வருகின்றனர். இதனால் இப்பகுதி தொடர்ந்தும் கடற்படையினரின் பூரண கட்டுப்பாட்டின்கீழ் இருந்து வருகின்றது.

தங்கள் வீடுகள் மற்றும் உடைமைகள் என்ன நிலையில் தற்போது உள்ளன என்பதனைத் தாங்கள் நேரடியாகச் சென்று பார்வையிடுவதற்கும், நஷ்டஈட்டிற்கு விண்ணப்பம் செய்வதற்கும் ஒழுங்கு செய்துதருமாறும் இப்பகுதி மக்கள் கையொப்பமிட்டு பொன்னாலை கடற்படை முகாம் பொறுப்பதிகாரிக்குக் கடந்த வாரம் நேரில் சமர்ப்பித்துள்ள கடிதமொன்றில் இவ்வேண்டுகோளை விடுத்திருக்கின்றனர்.

மாதகல் மேற்கு கிராம அலுவலரிடமும் இதுபற்றிய கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (எ-135)

## யாழ்.ஆஸ்பத்திரியின் கண் சிகிச்சைப் பிரிவில் நோயாளர் அதிகரிப்பு

வலி.வடக்கு,ஓக.27

யாழ்.போதனா வைத்தியசாலையின் கண் சிகிச்சைப் பிரிவில் நாளாந்தம் சிகிச்சை பெறவரும் நோயாளர்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளது.

அதிகாலைமுதல் இங்கு வருகைதரும் நோயாளர்கள், ஊழியர்கள் வரும்வரை இருக்கைகள் பற்றாக்குறை காரணமாக பல மணித்தியாலங்கள் நிற்கவேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தூர இடங்களில் இருந்து வருபவர்கள் குறிப்பிட்ட நேரத்துக்குள் ஆஸ்பத்திரிக்குள் வருகைதராமையால் சிகிச்சை பெறமுடியாது திரும்பிச்சென்று வேறு நாள்களில் சிகிச்சைக்காக வருகைதரவேண்டிய நிலைமையும் காணப்படுகின்றது.

கண் சிகிச்சைக்கென அதிக எண்ணிக்கையான நோயாளர்கள் வருகின்றமையால் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் கண் வைத்தியர்கள், ஊழியர்கள், நோயாளர்களைப் பார்வையிடுவதில் பல்வேறு சிரமங்களையும் அனுபவிக்கின்றனர் எனக் கூறப்பட்டது. (எ-86)

## குருநகர் அபிவிருத்திச் சங்கத்தில் இழைநார்ப் படகுகளுக்கான வார்ப்புப் பணிகள் ஆரம்பம்

குருநகர்,ஓக.27

குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்தில் கல் இழைநார் படகுகள் வார்ப்புச் செய்யும் வேலைகள் கடந்த வெள்ளிக்கிழமைமுதல் நடைபெற்று வருகின்றன.

குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத் தலைவர் அடெனிஸ்ராஜா தலைமையில் நடைபெற்ற இதுதொடர்பான ஆரம்ப நிகழ்வில் குருநகர் உதவிப் பங்குத்தந்தை அருட்திரு.அருட்செல்வன், கியுடெக் நிறுவன இயக்குநர், அருட்திரு.எஸ்.ஜெயக்குமார் அடிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவ்வள்ளச்சாலையில் 17அடி 6 அங்குல நீளமான கல் இழைநார் படகுகள் தயாரிக்கப்படும். இதற்குத தேவையான மூலப்பொருள்கள் இங்கு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

மேற்படி அளவுப் பிரமாணத்திற்கு அமைய நான்கு படகுகளை வார்ப்புச செய்வதற்கான கட்டளைகள் கிடைக்கப்பெற்று அவற்றை வார்ப்புச் செய்யும் வேலைகள் தற்போது துரிதகதியில் நடைபெற்று வருவதாகவும் -

தமது இம்முயற்சிக்கு யாழ்.கியுடெக் நிறுவனம் அனுசரணை வழங்கியுள்ளதாகவும் -

குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத் தலைவர் அடெனிஸராஜா தெரிவித்தார். (எ-51)

## வாழைப்பழம் விலை உயர்வு

சண்டிலிப்பாய்,ஓக.27

சங்கானை, பண்டத்தரிப்பு ஆகிய சந்தைகளில் வாழைப்பழத்தின் விலை அதிகரித்துள்ளது.

கதலி வாழைப்பழம் கிலோ 20 ரூபா முதல் 25ரூபா வரையும், இதரை மற்றும் கப்பல் வாழைப்பழங்கள் கிலோ 30 ரூபாமுதல் 40 ரூபாவரையும் தரத்தைப் பொறுத்து விற்பனையாகின்றன.

மேற்படி பிரதேசத்திலிருந்து தென்னிலங்கைக்குப் பெருமளவு வாழைககுலைகள் விற்பனைக்காகக் கொண்டு செல்லப்படுவதால் இந்த விலை உயர்வு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

### வேறுபட்ட கட்டணம் அறவீடு

வடமராட்சியில் உள்ள சிகையலங்கரிப்பு நிலையங்கள் சிலவற்றில் அறவிடப்படும் கட்டணங்கள் நிலையத்துக்கு நிலையம் வித்தியாசப்படுவதாகக் கூறப்பட்டது.

மேற்படி வேறுபட்ட கட்டணம் அறவிடப்படுவதை யாழ்.மாவட்ட தாய்ச் சங்கம் தலையிட்டு சீர்ப்படுத்துமா என பாதிப்புறும் பொதுமக்கள் கேட்கின்றனர். (எ-70)

### நூல்கள் அன்பளிப்பு

கொழும்பு ஆசியா பவுண்டேசன் நிலையத்தினர் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு பெறுமதிவாய்ந்த கல்விசார் பாட நூல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

மேற்படி புத்தகங்கள் அண்மையில் கல்லூரிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் இ. கயிலைநாதன் தெரிவித்தார்.(எ-117)

### மீனவர் ஓய்வூதியம்

சுழிபுரம் கடற்றொழில் பரிசோதகர் பிரிவில் கடற்றொழிலாளர்களுக்கான ஓய்வூதியத்திட்டம் செயற்படுத்தப்பட்டுவருகின்றது.

இப்பிரிவைச் சேர்ந்த சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி, சங்கானை, காரைநகர் ஆகிய இடங்களைச் சேர்ந்த 115பேர் இந்த ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்துள்ளனர்.

காரைநகர் அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்நத 48 பேரும் ஓய்வூதியத்திட்டத்தில் இணைந்துள்ளனர் என்றும் - ஓய்வூதியத் திட்டத்தில் சேருவதற்கான கட்டுப்பணத்தை இரண்டு தவணையிலும நான்கு தவணையிலும் செலுத்த முடியும் என்றும் கடற்றொழில் நீரியல் துறை அமைச்சு அறிவித்துள்ளதால, இப்பகுதிக் கடற்றொழிலாளர்கள் இதனைப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்று சுழிபுரம் கடற்றொழில பரிசோதகர் எம்.நக்கீரன் தெரிவித்துள்ளார். (எ-135)

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

(15ஆம் திருவிழா)



### இறைஞ்சும் வரம் கிடைக்கும்

நல்லை நகரானை
நாளும் தொழுதுவந்தால்
தொல்லைகள் பறந்தோடும்
தொடரும் பிணி தீரும்
இல்லை இனி......
ஒரு அல்லல் ஏன்றாகும்
இனிதாய் வாழ்வு மலரும்
இறைஞ்சும் வரம் கிடைக்கும்
ஈசன் கழல் உவக்கும்.

க.நாகேஸ்வரா, *சண்டிலிப்பாய்.*

### திருநல்லூரா வருவாயே!

தோயா இருவினைத் தொடக்கறவே
தோன்றாத் துணையாய் வருவாயே
தொடரும் பிறவி வேரறவே
சுடுவெம் கனலாய் வருவாயே
மாயா உலகின் மயக்கறவே
மாய்த்திடு மருந்தாய் வருவாயே
வதைக்கும் வஞ்சப் புலனடங்க
வாய்க்கும் குருவாய் வருவாயே
பாயா திருகண் நீர்சொரியப்
பண்ணும் நதியாய் வருவாயே
பாராம் நெஞ்சக் கல்லுருக்கப்
படுமோர் பொருளாய் வருவாயே
சேயாய்ச் சிவனார் கண்ணுதித்த
திருநல் லூரா வருவாயே
தேனாய் அமுதாய் தித்திக்க
திருநல் லூரா வருவாயே.

பண்டிதர் சி.கார்த்திகேசு *(சேந்தன்)*

### தமிழை வாழவைப்பாய்!

கரையோடு அலைமோதி இசையோடு கவிதந்த
கனிகொண்ட தேசமிது - தமிழ்க்
கவிகண்ட இன்பமெது? - இன்று
தரையோடு உடலிசாய தமிழன்தன் உயிர்மாய
தறிகெட்ட காலமாச்சே - தரணியில்
தமிழ்கெட்ட கோலமாச்சே - என்று
விரைந்தோடி வந்துந்தன் வடிவான கழல்வீழ
வடிவேலனே எமைக்காப்பாய் - தமிழை
வளமோடு வாழவைப்பாய்!

நீர்வையூர் வி.பராபரன்.

### கருணைக் கடலே!

இராகம்: கல்யாணவசந்தம் தாளம்: ஆதி

பல்லவி

கருணைக்கடலே கந்தா கடம்பா
குருநாதா வரம் தருவாய் நல்லூரின்
(கருணை..)

அனுபல்லவி

அருள்வாய் உருவாய் அகிலம் முழுதும்
திருவாய் பொலிய அடியார் வணங்கும்
(கருணை..)

சரணம்

அரகர சிவசிவ முருகா போற்றி
வரமருள் குகசண் முகனே போற்றி
திருமுரு காகுகா சரவண பவனே
இருநிதி பெறநல் லூரினில் அருள்தரும்
(கருணை..)

எஸ்.சிவானந்தராஜா *(பண்டத்தரிப்பு)*

### உறவுகளை எம்முடன் இணைத்துவிடு

வள்ளி மணவாளனே
புள்ளி மயிலேறி வா
சொல்லியழும் அடியார்க்கு - நீ
அள்ளி அருள் செய்திட வா
கலியுகத்துக் கந்தன் நீ - அடியார்
கலி தீர்க்க மயிலேறி வா
பலி கொண்ட பூமியிலே - எம்
கிலி நீங்கி வரம் தந்திட வா
போர்க்காடு தனை நீயும்
பூக்காடாய் மாற்றி விடு
ஊர் பிரிந்து சென்ற உறவுகளை
ஒரு தடவை சேர்த்து விடு.

சி.சிவநேசன் *ஆனைப்பந்தி*

# சமயக் கல்வியை வழங்குவதில் ஆக்கபூர்வமான முயற்சிகள் தேவை

## நினைவுப்பேருரையில் துணைவேந்தர் தெரிவிப்பு

**வாழ்நாள் பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா.கைலாசநாத குருக்களின் நினைவுப் பேருரையின் தொகுப்பு இது. யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இதனை நிகழ்த்தினார்.**

தமிழ் மக்களுடைய பிறப்பு வீதம் குறைவடைந்தமை, தமிழர்கள் பலர் வெளிநாடுகளுக்குச் சென்றமை, வாழும் தமிழர்களான சைவசமயத்தவர்களை மதமாற்றம் செய்தமை போன்ற காரணங்களுடன் இலங்கையில் சைவசமயத் தவர்களுடைய விகிதாசாரம் குறைவடைந்தமைக்கு வேறு பல காரணங்களும் அடிப்படையாக அமைந்துள்ளன.

வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ கா.கைலாசநாத குருக்களின இரண்டாம் ஆண்டு நினைவுப்பேருரை நிகழ்த்திய யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

நல்லூர் சிவன்கோயில் மண்டபத்தில் நியந்த்ரீ அமைப்பினர் ஒழுங்கு செய்த கூட்டத்தில் துணைவேந்தர் 'இலங்கையில் இந்துக்கள் - குடிப் புள்ளியியல் பார்வை' என்ற தலைப்பில் உரையாற்றினார்.

கலைப்பீடாதிபதி பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், துணைவேந்தர் ஆற்றிய உரை இங்கு தொகுத தரப்படுகின்றது:-

"இலங்கையின் வரலாறு சுமார் இரண்டாயிரத்து 500 ஆண்டுகள் பழமை மிக்கதாக இருப்பினும், ஆரம்பம் தொட்டு இங்கு இந்துசமயமே இருந்து வந்துள்ளது. இந்துசமயத்தை அடியொட்டி பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம், றோமன்கத்தோலிக்கம் என ஏனைய பல மதப் பிரிவுகள் தோற்றம் பெற்றன.

இந்துசமயத்தைச் சேர்ந்த மக்களே பின்நாளில் தோற்றம் பெற்ற ஏனைய மதங்களைத் தழுவிக்கொண்ட காரணத்தால் இந்துக்களின் தொகை வீதம் வீழ்ச்சிகண்டது.

கடந்த 20 வருடங்கள் இலங்கை வாழ் இந்துக்களுக்கு - தமிழர்களுக்கு - மிகமிக சோதனை மிக்க காலமாக அமைந்தன. 1981இல் எடுக்கப்பட்ட குடிசன தொகை மதிப்பீட்டின்படி இலங்கையில் இந்துக்கள் 15.5 வீதமானவர்களாக இருந்துள்ளனர். இன்று உரியமுறையில் புள்ளிவிவரம் எடுத்தால் நிச்சயம் இந்த வீதத்துக்கு கூடுதலாக இந்துக்கள் இருக்க மாட்டார்கள்.

### குடிசன மதிப்பீடுகள்

1871ஆம் ஆண்டில் இலங்கையில் முதன்முதல் குடிசன மதிப்பு மேற்கொள்ளப்பட்டது. அன்றுதொடக்கம் பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை குடிசன மதிப்புகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், 1981ஆம் ஆண்டுக்குபின் 1991, 2001ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட புள்ளிவிவரங்கள் இங்கு நிலவிய அசாதாரண சூழ்நிலைகளால் முழுமை பெறவில்லை. 2001இல் இலங்கையின் 25 மாவட்டங்களில் 18 மாவட்டங்களில் மட்டுமே விவரங்கள் எடுக்கப் பட்டன.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள ஏழு மாவட்டங்களில் குடிசன மதிப்பு நடைபெறவில்லை. சில மாவட்டங்களில் பூரணமாக கணக்கெடுக்கப்படவில்லை.

18 மாவட்டங்களில் எடுக்கப்பட்ட புள்ளிவிரப்படி 7.5 வீதமான இந்துக்களே கணக்கெடுக்கப்பட்டுள்ளனர். 2001ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி கொழும்பு, கம்பஹா, நுவரெலியா போன்ற மாவட்டங்களில் இந்துக்களின் தொகை முன்னிருந்ததிலும் பார்க்க அதிகரித்திருந்தது.

### விகிதாசாரம் குறையக் காரணம்

இந்துக்களுடைய விகிதாசாரம் குறைவடைவதற்கு பின்வருவன காரணங்களாகக் கூறப்படுகின்றன:-

★ இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரங்கள்.

★ குடிசன வளர்ச்சிக்குறைவு.

★ விவாக வயது பின் தள்ளிச் சென்றமை.

★ விதவை மறுமணங்கள் குறைந்தமை.

★ பிறப்பு வீதம் குறைந்தமை.

★ வெளிநாட்டுப் பயணங்கள்.

★ பெருந்தோட்டப் பகுதி தமிழர்கள் பலர் ஏழ்மை, அறியாமை என்பவற்றைப் பயன்படுத்தி குடும்பக்கட்டுப்பாடுகள் செய்தமை.

★ மதமாற்றங்கள் செய்யப்பட்டமை.

### நாட்டைவிட்டு வெளியேறியமை

கடந்த 30 வருடங்களில் 10 இலட்சம் தமிழர்கள் நாட்டைவிட்டு வெளியேறி உள்ளனர். ஸ்ரீமாவோ - சாஸ்திரி உடன்படிக்கையின்கீழ் இந்தியத் தமிழர்கள் சுமார் 5 லட்சம் பேர் வெளியேறினர். மீதி 5 லட்சம் பேரும் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள், வெளிநாட்டு செலாவணி, உள்நாட்டுப் போர்க் காரணங்களால் வெளியேறினர்.

ஏனைய சமயத்தவர்களைவிட சைவசமயத்தவர்கள் - தமிழர்கள்தான் குடிவெளியேற்றத்தால் அதிகம் பாதிக்கப்படனர்.

### மதம்மாற்றம் செய்தமை

சைவமக்கள் பலர் பிறசமயங்களுக்கு மதமாற்றம் செய்யப்படும் அதேசமயம், சிங்கள கிறிஸ்தவர்கள் பலர் சிங்கள பௌத்தர்களாக மாறியுள்ளனர். யாழ்ப்பாணம், வன்னி, மலையகம் போன்ற இடங்களிலிலிருந்து இன்று குடும்பம் குடும்பமாக இஸ்லாம் மதத்துக்கு மாறிவருவதை தினகரன் பத்திரிகைமூலம் தினமும் வெளிவரும் அறிவிப்புகள், விளம்பரங்கள் மூலம் அறியமுடிகின்றது.

### 1946இலும் இன்றைய சனத்தொகையே

யாழ்ப்பாணம் - காலி ஆகிய இரு மாவட்டங்களிலும் நூற்றாண்டுகளாக ஒரேகுடிசன தொகையைக் கொண்டிருந்தன. 1981இல் காலியில் 9 லட்சத்து 90ஆயிரம் பேரும், யாழ்ப்பாணத்தில் 10 லட்சத்து 2ஆயிரம் பேரும் இருந்துள்ளனர். குடிசனத்தொகை சாதாரண நிலையில் - இயற்கையாக அமையின் யாழ்ப்பாணத்தில் இன்றும் 10 லட்சம் பேர் இருக்கவேண்டும் ஆனால், இன்று 5 லட்சம் பேர் மட்டுமே உள்ளனர். 1946ஆம் ஆண்டிலிருந்து 4 லட்சத்து 60 ஆயிரம் பேரைப் போன்றே 2002இலும் உள்ளனர். எனவே, 1946ஆம ஆண்டிருந்த குடித்தொகையே இன்றும் யாழ்ப்பாணத்திலுள்ளது எனலாம்.

இலங்கை சுதந்திரமடைய முன் எவரும் இலங்கையைவிட்டு வெளியேறவில்லை. ஒருசில தமிழர் மட்டுமே சிங்கப்பூர், மலேசியா சென்றனர். சுதந்திரத்தின்பின் வெளிநாட்டவர் வெளியேற, தொடர்ந்து தமிழர்களும் வெளியேறவேண்டிய நிலையேற்பட்டது.

### நகரப்புற குடியேற்றம்

வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனை இடங்களில் நகரப் புறங்களில்தான் இந்துக்கள் அதிகம் வாழ்கின்றனர். நுவரேலியாவில் 52 வீதமானவர் வாழகின்றனர். திருமலை, மன்னார், அம்பாறை போன்ற இடங்களில் மூன்றாம் நிலையிலேயே இந்துக்கள் உள்ளனர். டெனியாயாவில் 15லட்சம் இந்துக்கள் வாழ்ந்தாலும் அங்கு சிவாச்சாரியர்களோ, ஆலயங்களோ மிகக் குறைவு. தென்னிலங்கையின் ஏழு மாகாணங்களிலும் நகரப்புறங்களில்தான் இந்துக்கள் செறிந்து வாழ்கின்றனர். கொழும்பு நகரில் மட்டும் ஒரு லட்சம் இந்துக்கள் உள்ளனர்.

### சிசுமரணம்

சிங்கள, முஸ்லிம் இனங்களைப் போல் தமிழர்களும் ஆண், பெண் வேறுபாடின்றி அதிகரித்தாலும், தமிழரிடையே சிசுமரணம் அதிகரித்துக் காணப்படுகிறது. தமிழர் பிரதேசங்கள் பின்தங்கியதாக, பொருளாதார பின்னடைவுகள், மருத்துவ வசதிகள் குறைந்தவையாக காணப்பட்டமையாலும் மக்களிடையே மூடக்கொள்கைகள் அதிகரித்ததாலும் சிசு மரணங்கள் அதிகரித்துள்ளன.

### ஆத்மீக கல்வித் தேவை

பௌத்தர்கள் தம்மக்களுக்கு ஞாயிறுதோறும் பிரிவேனா பாடசாலைகள் நடத்தி சமயத்தை வளர்கிறார்கள். இந்துக்களிடையே சமயக் கல்வியை வளர்க்கக்கூடிய அமைப்புக்கள் இல்லை.

இந்து மக்களுடைய உள நலத் தேவைகள் எம் மக்கள் மத்தியில் நல்ல நிலையில் பகிரப்படவில்லை. சமயப்பிரமுகர்கள், சிவாச்சாரியார்கள் இந்துக்களுடனான உறவுகளை அதிகரித்துக் கொள்ளவேண்டும். இவர்களுடைய தொண்டுகள் இந்து மக்களுக்கு அவசியம் கிடைக்கவேண்டும்.

**வி.பி.சர்மா**

☆


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
01 - 10 - 1925



மறைவு
28 - 07 - 2002

### அமரர் முருகேசு வைரவப்பிள்ளை

2002.07.28 அன்று இறைபதமடைந்த அன்னாரது இறுதிக்கிரியைகளில் கலந்து, எமது பிரிவுத்துயரைப் பகிர்ந்துகொண்ட மற்றும் அனைத்து உள்ளங்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (27.08.2002) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்வதோடு, மதியபோசன விருந்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அங்களப்பாய்,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(7570)


# விமானவிபத்தை ஆராய சீனாவில் இருந்து குழு!

கொழும்பு,ஓக.27

அண்மையில் களுத்துறையில் விமானப்படை விமானம் ஒன்று வீழ்ந்து எரிந்தது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

விசாரணைகளுக்கு உதவ சீனாவில் இருந்து விசேட குழு ஒன்று விரைவில் இலங்கை வரவிருப்பதாக விமானப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார். இந்தக் குழுவினர் விபத்து நடந்த இடத்திற்கு நேரில் சென்று விசாரணை நடத்துவர்.

விமான விபத்துக்கு தொழில்நுட்பக் கோளாறுதான் காரணம் என்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. விபத்தில் இரண்டு விமானிகள் உட்பட ஐவர் கொல்லப்பட்டது தெரிந்ததே. (ம)

## இரு கப்பல்கள் பருத்தித்துறை வந்தடைந்தன

யாழ்ப்பாணம்,ஓக.27

இந்தியாவின் தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து ஆயிரத்து 500 மெற்றிக்தொன் சீமெந்தை ஏற்றிக் கொண்டு 'ஹெந்தல' கப்பல் நேற்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

அத்துடன் நிவாரணம் வழங்கவென ஒரு தொகுதி அரிசி மற்றும் சீனி ஆகியவற்றை ஏற்றிக்கொண்டு 'சஜிந்த' கப்பலும் இந்தியாவில் இருந்து வந்துள்ளது.

இவற்றில் இருந்து பொருள்களை இறக்கும் பணிகள் இடம்பெற்று வருவதாக யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஓ-10)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

காரைநகர்,ஓக.27

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ-73)

## சமகால அரசியலை விளக்கும் தெருவெளி நாடகம்

யாழ்ப்பாணம்,ஓக.27

சமகால அரசியல் நிலைப்பாடுகளை எடுத்துவிளக்கும் வகையில் தமிழீழ கலைபண்பாட்டுக் கழகத்தின் ஆதரவுடன் புதுவை அன்பனின் 'கனவுகள்' தெருவெளி நாடகம் குடாநாட்டின் பல பகுதிகளிலும் நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

வன்னியில் இருந்து சைக்கிள்களில் இங்கு வந்துசேர்ந்த கலைஞர்கள், குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சைக்கிள்களில் சென்றே இந்த நிகழ்வை நடத்தி வருகின்றனர்.

பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள், பொது இடங்கள் மற்றும் பொது மக்கள் கூடுகின்ற இடங்களில் இந்தத் தெருவெளி நாடகம் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. (ம-4)


நாங்கள் வருகின்றோம். யாழ். மக்களுக்கு!
உலகப் புகழ்பெற்ற

TOSHIBA

ஊடாக பின்வரும் சேவைகளை

- Digital and Analog Photo Copiers
- Fax Machines
- Note Book Computers
- Business Communication System

★ ஒரு Ph o Copy Machine ஐ கொள்வனவு செய்து 20,000 கொப்பிகளுக்கான Toners ஐ இலவசமாக்கிக் கொள்ளுங்கள்.

★ இத்துறையில் நிபுணர்கள் வருகை தந்துள்ளார்கள். உங்கள் இத்துறைசார் அனைத்து தேவைகளுக்கும் இன்றே அணுகுங்கள்.

எங்கள் சேவை 28.08.2002 வரை மாத்திரமே!!! (7573)

WHEEL MOVERS OFFICE AUTOMATION
642, Point petro Road, Nallur, Jaffna.
Tel: 021-2179, 3234 Cool Line: 2423

JOHN KEELS OFFICE AUTOMATION (PVT) LTD.
320/1, Union Place, Colombo 2.
Tel: 431576, 075-332611, 074-715544 Fax: 431745



## மாணவர் கல்விச் சுற்றுலா

(மாணவர்கள் மட்டும்)

அநுராதபுரம், மிகிந்தலை ~ இசுறுமுனியா
சிகிரியா ~ டம்புள்ளை ~ மாத்தளை
திருகோணமலை, கண்டி~ நுவரெலியா
இன்னும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்.

காலம்:- 30.08.2002

யாழ். பிரபல சமூகவியல் ஆசிரியரின் வழிகாட்டல்.

பதிவுசெய்யும் கடைசித் திகதி 29.08.2002 காலை10 மணி

தொடர்பு:-
லிங்கன் ரூரிஸ்ட் இன்
குகன் தொலைத் தொடர்பகம்
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி-3513

(7568)



## துயரினைப் பகிர்ந்து கொள்கின்றோம்

எமது பாடசாலை ஆசிரியர் *திரு. வீ. குமாரவேற்பிள்ளை* அவர்களது தந்தையார்

### வேலுப்பிள்ளை வீரகத்தி

*(ஓய்வுபெற்ற அதிபர், இடைக்குறிச்சி சுப்பிரமணிய வித்தியாலயம்)*

அவர்கள் காலமானதன் காரணமாக துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுடன் நாமும் துயரினை பகிர்ந்து கொள்கின்றோம்.

*அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.*

*கிளி/பளை மத்திய கல்லூரி, பளை.* - ஆசிரியர் நலன்புரிச் சங்கம்.

(7571)

# வடக்கு-கிழக்கை அபிவிருத்தி செய்வதற்கு 4 ஆண்டுகளுக்கு 50 கோடி டொலர் தேவை

## அமைச்சர் ஜயலத் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.27

வடக்கு - கிழக்கை அபிவிருத்தி செய்வதற்கென அடுத்த நான்கு ஆண்டுகளில் சுமார் 50 கோடி டொலர்கள் தேவைப்படுகின்றது என்று அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் பெருந்தொகையினை வெளிநாட்டு நன்கொடையாளர்களிடமிருந்து பெற இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சமாதான நடவடிக்கைகளின் முன்னெடுப்புகளின் அடிப்படையில் வடக்கு - கிழக்குப் பகுதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. கடந்த 20 வருடங்களாக இப்பகுதியில் எந்த வித அபிவிருத்தி வேலைகளும் செய்யப்படவில்லை. இதனாலேயே இப்பகுதியின் அபிவிருத்திக்கு அதிகளவு நிதி தேவைப்படுகின்றது.

குறிப்பாக வன்னிப் பிரதேசம் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளது. அங்குள்ள மக்களுக்கு உணவு, சுகாதாரம் முதலான வசதிகள் செய்துகொடுக்கப்படவேண்டி உள்ளது. அதேவேளை, இப்பகுதிகளில் கண்ணிவெடிகளை அகற்றுகின்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவேண்டிய தேவை உள்ளது.

- எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-12)

## வட்டுக்கோட்டையில் நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஓக.27

வட்டுக்கோட்டை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு நாளை புதன்கிழமை ஏ.ஆர்.வி. தடுப்பூசி போடப்படவுள்ளது.

அன்றைய தினம் காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை வட்டு வடக்கு கற்பகச் சோலை சனசமூக நிலையத்திலும் 11.30 மணிமுதல் 12 மணிவரை சங்கரத்தை குளத்தடி கிராம முன்னேற்றச் சங்கத்திலும் போடப்படும்.

பொதுமக்கள் இச்சந்தர்ப்பத்தைத் தவறவிடாது அன்றயதினம் தமது வளர்ப்பு நாய்களுக்கு தடுபபூசியைப் போட்டுக் கொள்ளுமாறு பொதுசுகாதாரப் பரிசோதகர் கேட்டுள்ளார். (ம-15)

## 22 குடும்பங்கள் மன்னாரில் நடத்திய 14 வருடகால அகதிவாழ்க்கை முடிவு

### மீளக்குடியமர யாழ். கூட்டிவரப்பட்டனர்

மன்னார்,ஓக.27

கடந்த 14 வருடங்களாக மன்னார், பேசாலை திறந்தவெளி முகாமில் தங்கியிருந்த அகதிகள் யாழ்ப்பாணத்தில் மீளக்குடியமர்த்துவதற்காக நேற்று அழைத்துச்செல்லப்பட்டனர்.

22 குடும்பங்களைச் சேர்ந்த 102 பேர் இந்தத் திறந்தவெளி முகாமில் தங்கியிருந்தனர்.

அகதிகள் மீளக்குடியமர்த்தல் அமைச்சின் பணிப்பின் பேரில் மன்னார் மாவட்டச்செயலாளர் ஆர்.வரதீஸ்வரன், அவர்களை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச்சென்றார்.

இந்த 22 குடும்பங்களும் தமது சொந்தஇடங்களிலேயே குடியமர்த்தப்பட உள்ளன எனவும் வரதீஸ்வரன் கூறினார். (ம)

## புத்தளம் பிரதேச செயலகத்தில் ஆவேசத்துடன் நடந்த அரசியல்வாதி!

புத்தளம்,ஓக.27

புத்தளம் பிரதேச செயலாளர் காரியாலயத்தில் பணிபுரியும் சகல ஊழியர்களும் நேற்றுத் தமது கடமைகளைப் பகிஷ்கரித்து புத்தளம் பொலீஸ் நிலையத்திற்குச் சென்று புகாரொன்றைச் செய்தனர்.

புத்தளம் நகரிலுள்ள பிரபல அரசியல்வாதியொருவர் நேற்றுச் செயலகத்துக்கு வந்து பிரதேச செயலாளர் எம்.நபீல் மற்றும் சமுர்த்தி அதிகாரிகள், கிராம அதிகாரிகள் ஆகியோரைக் கடுமையான முறையில் கண்டித்ததை ஆட்சேபித்தே அவர்கள் பொலீஸில் முறைப்பாடு செய்தனர். தான் சார்ந்துள்ள அரசியல் கட்சியின் ஆதரவாளர்களுக்கு சமுர்த்தி நிவாரணங்கள் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே அந்த அரசியல்வாதி ஆவேசத்துடன் நடந்துகொண்டார் என்று கூறப்பட்டது.

இதனால் தங்களது கடமைகளைச் சரிவர செய்யமுடியாதிருக்கிறது என்று பிரதேச செயலாளர் எம்.நபீல் பொலீஸில் புகார் செய்துள்ளார். (ம)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஓக.27

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உள்ளகப் பயிற்சி மாணவர்களின் பரீட்சை மற்றும் நியமனம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரியில் இடம்பெறவுள்ளது. என்று பீடாதிபதி அறிவித்துள்ளார். (ம-3)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஓக.27

யாழ்.மாவட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தின் முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் வடமராட்சிக் கோட்ட அரசியல் துறையினர் கலந்துகொள்ள இருப்பதால் வடமராட்சிக் கோட்டத்திற்கு உட்பட்ட அனைத்து தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகளையும், பிரத்தியேக வகுப்பு நடத்துபவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றியப் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார். (ம-ரி)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஓக.27

யாழ்.மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்களில் பணியாற்றும் பதவி நிலை உத்தியோகத்தருக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

தொலைக்கல்வி தொடர்பாக இடம்பெறவுள்ள இக்கலந்துரையாடலில் சகல திணைக்களங்களிலும் பணியாற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்களை கலந்துகொள்ளுமாறு யாழ்.அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஒ-10)

## பேச்சு வெற்றிபெற வேண்டி மட்டு.கிறிஸ்தவர் பாதயாத்திரை

கொழும்பு,ஓக.27

நாட்டில் விரைவில் சமாதானம் ஏற்படவேண்டும் என்றும்-

நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுக்கள் வெற்றியளிக்கவேண்டும் என்றும் வேண்டி மட்டக்களப்பில் உள்ள கிறிஸ்தவர்கள் இணைந்து எதிர்வரும் சனியன்று பாதயாத்திரை ஒன்றை நடத்தவுள்ளனர்.

புளியந்தீவு புனித மரியன்னை ஆலயத்திலிருந்து ஆரம்பமாகும் இந்தப் பாதயாத்திரை தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஆதித்தமலை புனித சதாசகாய அன்னை ஆலயத்தைச் சென்றடைவதுடன் நிறைவுபெறும்.

அதேவேளை-

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள ஆதித்தமலை புனித சதாசகாய அன்னை ஆலயத்தில் வரும் ஞாயிறன்று திருவிழா இடம்பெறவுள்ளது. இந்தத் திருவிழாவுக்கு தென்பகுதியைச் சேர்ந்த சிங்கள மக்களும் சென்று வழிபடுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம-12)

## நல்லூர் ஆலயச் சூழலில்

யாழ்ப்பாணம்,ஓக.27

நல்லூர் ஆலய உற்சவத்தை ஒட்டி ஆலயச்சூழலில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும் நிகழ்வுகளின் விவரம் வருமாறு:-

★ அகில இலங்கை கம்பன் கழகத்தால் கம்பன் கோட்டத்தில் இன்று மாலை 6மணிக்கு நடத்தப்படும் தெய்வீக சொற்பொழிவில் 'வேடுவக் குலச் செல்வன்' என்ற தலைப்பில் ரி.தயாபரனின் உரை.

★ துர்க்கா மணி மண்டபத்தில் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் இசை ஆராதனை நிகழ்வில் மாலை 6 மணிக்கு மல்லிகா குணபூசணாம் நாகராசா அவர்களின் பாட்டுக்கச்சேரி. அணிசெய் கலைஞர்கள்: வயலின்-ஏ.ஜெயராமன், மிருதங்கம்-மகேந்திரன், கடம்-எம்.லோகேந்திரன்.

★ நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் அதிகாலை 5மணிக்கு திருமுறை வீதிப்பஜனையும் குருமூர்த்தி ஆலயத்தில் விசேட வழிபாடுகளும் இடம்பெற்று காலை 9மணிக்கு சமய தீட்சை வழங்கப்படும் தொடர்ந்து புராணப்படனம்.

★ வடபிராந்திய இந்துசமய பேரவையின் ஏற்பாட்டில் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் இடம்பெறும் தெய்வீக இசைச் சொற்பொழிவில் "அளவில்லாப் பெருமையர்" என்ற தலைப்பில் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின் உரை.

★ நல்லூர் சைவ மகாசபையினரால் நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தெய்வீகத்தொடர் இசைப்பேருரையில் மாலை 5.45மணிக்கு 'அரங்கேற்றம்' என்றதலைப்பில் கான கதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வைத்தியானந்தசர்மாவின் கதாப்பிரசங்கம். (ம-ரி-86)

## சித்திரவதைக்குள்ளான பெண்ணுக்கு நஷ்டஈடு

கொழும்பு,ஓக.27

கடந்த வருடம் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குட்படுத்தப்பட்ட தமிழ் யுவதி ஒருவருக்கு இரண்டரை லட்சம்ரூபா நஷ்டஈடு வழங்குமாறு உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கொழும்புப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குட்படுத்தப்பட்ட யோகலிங்கம் வனித்தா என்ற தமிழ்ப் பெண்ணுக்கே இந்த நஷ்டஈட்டை வழங்குமாறு உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தன்னை சித்திரவதைக்குள்ளாக்கிய பொலீஸாருக்கு எதிராக இவர் உயர்நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இதனை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதி அரசர்கள் இந்தப் பெண்ணைச் சித்திரவதை செய்த சம்பந்தப்பட்ட மூன்று பொலீஸாரும் தமது சொந்தப் பணத்திலிருந்து ஒன்றரை லட்ச ரூபாவையும் அரசாங்கம் ஒரு லட்ச ரூபாவையும் அப்பெண்ணுக்கு இழைக்கப்பட்ட அடிப்படை உரிமை மீறல் குற்றத்தின் பிரகாரம் வழங்க வேண்டுமென நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (ம)

## இறால் பண்ணை அமைப்பதை எதிர்த்து உடப்புவாசிகள் ஆர்ப்பாட்டம்

### பிரதேச செயலர் தற்காலிகமாக இடைநிறுத்தினார்

புத்தளம் தொகுதியிலுள்ள உடப்பு தமிழ்க் கிராமத்தில் சில அரசியல் வாதிகள் சட்டவிரோதமான முறையில் இறால் பண்ணை அமைக்கும் முயற்சியை ஆட்சேபித்து நேற்று முந்தல் பிரதேச செயலாளர் செயலகத்துக்கு முன்பாக பிரதேசவாசிகள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்கள். ஆர்ப்பாட்டக்காரர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இவ்விடயம் குறித்து உடனடி நடவடிக்கையில் இறங்கிய பிரதேச செயலாளர் எஸ்.எம்.மலிக் பொலீஸாரின் உதவியுடன் பண்ணை அமைப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பாரிய இயந்திரங்களின் சாவிகளைப் பொறுப்பேற்றதுடன் பண்ணை அமைக்கும் பணியை தற்காலிகமாகத் தடையும் செய்துள்ளார். (ம)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஓக.27

தலையாழி ஞானவைரவர் ஆலய அறநெறிப்பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று மாலை 4.00 மணிக்கு திருமதி கு.சண்முகதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை முன்னாள் அதிபர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார். (ம-3)

## உர மானியம் ஒக்ரோபர் வரை நீடிப்பு

கொழும்பு,ஓக.27

உரமானியத் திட்டத்தை விவசாய அமைச்சு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி வரை நீடித்திருக்கிறது. இத்திட்டம் செப்ரெம்பர் மாதம் மட்டுமே அமுலில் இருக்குமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (ம)


மயிர்க்கூச்செறியும் சாகச நிகழ்வு

ஒரே நேரத்தில்
இரண்டு மோட்டார் கார்களும்
இரண்டு மோட்டார் சைக்கிள்களும்

பாதாளக் கிணற்றில்
சீறிப் பறக்கும் காட்சி
மயிர்க்கூச்செறிய வைக்கும்
தென்னிலங்கை வீரர்களின் சாகசம்

காண வாருங்கள்! திரண்டு வாருங்கள்!!

குறைவான கட்டணத்தில் : ரூபா 30/= வளர்ந்தவர்
: ரூபா 10/= 12 வயதுக்குட்பட்டோர்
இடம் : யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலய மைதானம்
காலம் : 27.08.2002 - 08.09.2002
மாலை 6.30 மணி

27.08.2002 யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கல்வி மேம்பாட்டு ஊக்குவிப்புக் குழு.

குறிப்பு: இருதய பலவீனமுள்ளவர்கள் காட்சியைப் பார்வையிடுவதைத் தவிர்த்துக் கொள்ளவும்.



ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
ரஜனிகாந் மனிஷா, கவுண்டமணி நடித்த
பாபா
காட்சிகள்: 10.30, 2.30, 6.00, 9.30
பல வருடங்களுக்குப் பின்னர் இரவு 9.30மணிக் காட்சி காண்பிக்கப்படுகின்றது.
(6-23125)

லஷ்சுமி இணுவில்.
அர்ஜுன், சாக்ஷி, செந்தில், வினீத், திவ்யா உன்னி, கவுண்டமணி நடித்த
வேதம் (ரீலஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (பு.நே.)

தேவை
புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ள சேல்ஸ் மன் தேவை. அத்துடன் கண்ணாடிக் கடையில் கண்ணாடிகளை வெட்டுவதற்கும் அனுபவமுள்ள ஆண் பணியாளர் தேவை.
தொடர்பு:
மிலேனியன் பெஷன்
இல. 10, கிரான்பஸார், பெரியகடை,
(7584) யாழ்ப்பாணம்.

நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், ஜோதிகா நடித்த
குஷி (ரீலஸ்)
தினசரி : 11.00, 3.00
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்.
(7460)

நிறஞ்சனாஸ் சங்கானை
அஜித், பிரியாகில் நடித்த
ரெட் (ரீலஸ்)
காட்சிகள்: 11.00, 2.30, 6.30 (புதியநேரம்)
(6-23126)

ஓவியப்பயிற்சி
ஓவியம் மற்றும் பிளாஸ்ரிக் தொழில்நுட்பப் பயிற்சியைப் பெற விரும்புபவர்கள் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.
யசோ
35, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
(7572)

## 18ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தம்:

# சர்வஜன வாக்கெடுப்பை நடத்தாமலிருக்க ஜனாதிபதி முயன்றால் அரசின் நிலை என்ன?

கொழும்பு,ஓக.27

18ஆவது அரசமைப்புச் சட்ட சீர்திருத்தத்திற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டுமென்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்து அதை ஜனாதிபதி ஏற்காதிருப்பாரேயானால் ஜனாதிபதிக்கு எதிராக நாடாளுமன்றில் குற்றவிசாரணைப் பிரேரணையைக் கொண்டுவருவதைவிட அரசுக்கு வேறு வழியில்லை.

- இவ்வாறு தெரிவித்தார் நிதி அமைச்சரும் அரசமைப்புச் சட்ட நிபுணருமான ஜனாதிபதி சட்டத்தரணி கே.என்.சொக்ஸி.

நேற்றுக்காலை சுயாதீன தொலைக்காட்சி ஒன்றிற்கு வழங்கிய நேரடிச் செவ்வியின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் நாடாளுமன்றைக் கலைக்கும் ஜனாதிபதியின் தற்றுணிபு அதிகாரத்தை ஒழிக்கும் 18 ஆவது அரசமைப்புச் சீர்திருத்தம் தயாராக இருக்கிறது. நாளை இடம்பெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் திருத்தச் சட்டமூலத்தைச் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறவும், பின்னர் உயர்நீதிமன்றப் பரிசீலனைக்கு அதனைச் சமர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

18ஆவது அரசமைப்புச் சட்ட சீர்திருத்தத்திற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைக்கு மேலதிகமாக சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்படவேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்மானிக்குமானால் அந்தத் தீர்ப்பை ஜனாதிபதியால் உதாசீனப்படுத்த முடியாது. அரசமைப்பின் 85ஆவது சட்டவிதியின் முதற்பிரிவில் இது குறித்து தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், அதனையும்மீறி ஜனாதிபதி சர்வஜன வாக்கெடுப்பை நடத்தாதிருக்க முற்படுவாரானால், அவருக்கு எதிராக நாடாளுமன்றில் குற்ற விசாரணைப் பிரேரணையைக் கொண்டுவருவதைத் தவிர அரசுக்கு வேறு வழியில்லை என்றார். (ம)

### மட்டக்களப்பில் ரெலிகொம் ஊழியர் ஆற்றில் மூழ்கி பலி!

மட்டக்களப்பு,ஓக.27

மட்டக்களப்பு முகத்துவாரம் ஆற்றில் குளிக்கச்சென்ற மட்டக்களப்பு ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவன ஊழியர் ஒருவர் ஆற்றில் மூழ்கி மரணமானார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது. மரணமானவர் புவிராஜன்(வயது 25) என்ற இளைஞராவார். இவரது சடலம் நேற்றுமுன்தினம் ஆற்றில் இருந்து தேடி எடுக்கப்பட்டது. (ம)

### அதிபர் சங்க நிர்வாகிகளுடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஓக.27

யாழ்ப்பாணம் வந்துள்ள உலக வங்கித் தூதுக்குழு யாழ். மாவட்ட பாடசாலை அதிபர்கள் சங்கத்தினரை இன்று மாலை 5 மணிக்கு யாழ். பஸ்ரியன் ஹோட்டலில் சந்தித்து கலந்துரையாடவிருக்கின்றது.

சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களை இச்சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு அதிபர் சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (ம-3)

### புனரமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைப்புப் பணிகள் தொடர்பாக இச்சந்திப்பில் விரிவாக ஆராயப்பட இருக் கின்றது.

பன்னாட்டு அரசசார்பற்ற அமைப்புக்களின் கொழும்பு அலுவலகத்தில் பணிபுரியும் உயர்மட்ட பிரதிநிதிகளே இச்சந்திப்பில் பங்குபற்றவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

### செப்.2...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு வாரத்தில் 3 அல்லது அதற்குக் கூடுதலான தடவைகள் அமர்வுகள் நடைபெறும்.

ஐக்கியத்திற்கான இந்தத் தேசிய உரையாடலை கடந்த ஜூலை 26ஆம் திகதி ஜனாதிபதி ஆரம்பித்து வைத்தார்.

இதுவரை கல்விமான்களும் பொது அமைப்பினரும், சமூக அந்தஸ்து உள்ள தனி நபர்களும் தமது கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றனர்.

சமாதான நடவடிக்கைகளை நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருக்கும் குறிப்பிடத்தக்க ஒரு பிரிவினர் அவற்றை வெற்றிகரமாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றனர். இவ்வாறு செயலகம் தெரிவித்திருக்கின்றது. (ம)

### உலக வங்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் ஆகியவற்றை நேரில் பார்வையிடும் குழு அவற்றைப் புனரமைப்பது குறித்தும் ஆராயும். (ம-3)

### நிலைமைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டேன். இராணுவ வீரர்கள் எவ் வாறு வாழ்கிறார்கள் என்பதைக் கண்ணால் கண்டேன். யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை நிலையையும் காணக்கிடைத்தது.

இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான தெளிவான ஒரு திட்டத்தைக் கொண்டவராக அன்று கொப்பேகடுவ செயற்பட்டார் - என்றார்.

இச்சந்திப்பின்போது பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கப்படுவது தொடர்பாக மகா நாயக்கருக்கு விளக்கிக் கூறினார். (ம)

### சுதந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுபவம் பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்களை அரசமைப்புக் கவுன்ஸில் பெற்றுள்ளது. அவர்களது திறமைக்கேற்ப புள்ளி வழங்கும் முறையொன்று வகுக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை, ஜனாதிபதியின் அங்கீகாரத்துக்காக அவரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டது.

அங்கீகாரம் கிடைத்ததும் அந்த நடைமுறைக்கு அமைய சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

எனினும் ஜனாதிபதியின் அனுமதியைப் பெற்ற பின்னரே அவர்களுக்கு நியமனம் வழங்கப்படும் என்று அரசமைப்பு கவுன்ஸில் வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசமைப்பு கவுன்ஸில்கள் அமைக்கப்பட்டு ஐந்து மாதங்களாகியும். அந்தக் கவுன்ஸில், தனக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்தி சுதந்திர ஆணைக்குழுக்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று முன்னர் குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கது. (ம)

### திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(வயது 38) என்பவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இரண்டு பிள்ளைகளின் தந்தையான படுகாயமடைந்த எச்.ஏ.பி.தர்மதாஸ (வயது 37) அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். "சம்பவம் நடந்த சில நிமிடங்களில் வெள்ளைச் சேட்டும், வட்டத் தொப்பியும் அணிந்த, கறுப்பு நிறமுடைய ஒருவர் கையில் துப்பாக்கியுடன் தனது வீட்டுக்கு எதிரே நடந்து சென்றதைக் கண்டேன்" என்று அயலவர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

சம்பந்தப்பட்ட மூவரும் ஏற்கனவே வெட்டுக்கொத்தில் ஈடுபட்டவர்கள் என்றும் பழைய பகைமையே துப்பாக்கிச்சூட்டுக்கான காரணமாக இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக ருவன் துசார என்பவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். மற்றொரு சந்தேகநபரான கபில என்பவர் தேடப்பட்டு வருகிறார். பொலீஸார் விசாரணைகளை நடத்திவருகின்றனர். (ம)

### சர்வ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவுசெய்வது எனத் தீர்மானித்தது.

சேருவில ராஜமகா விகாரையின் விகாராதிபதி சரணகிட்டி தேரரும் மற்றும் அவரது கிராமத்தைச் சேர்ந்த சிலரும் இணைந்து இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

இம்மனுவில் தேர்தல் ஆணையாளர், மாகாண சபைகள் அமைச்சர், சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அரசமைப்பின்படி மக்கள் கருத்தை அறிவதற்கான சர்வஜன வாக்கெடுப்பை நடத்தும்படி தேர்தல் ஆணையாளருக்கு ஜனாதிபதியால் மாத்திரமே உத்தரவிட முடியும். நீதிமன்றங்களினால் அத்தகைய உத்தரவுகளை விடுக்கமுடியாது. எனவே, இந்த மனுவை நிராகரிக்குமாறு சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ம)


**யாழ் நகரில் புதிய உதயம்**
**ENGLISH ACADEMY**
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(புகையிரதக் கடவை அருகில்)
தரம் 6 முதல் 13 வரையான வகுப்புகள்
**ENGLISH CLASSES Only**
**BY: K.T.RAJAH**
ஆரம்பம்: 08.09.2002 முன்னதாகப் பதிவுகளை மேற்கொள்ளவும்.
தொடர்புகளுக்கு:
வித்தியா தொலைத்தொடர்பு நிலையம்,
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். T.P. No: 021-2588. (7515)

**உடன் தேவை**
1. தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்பாளர்கள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
2. இரவு பகல் வேலை செய்யக்கூடிய பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் தேவை.
3. 62 வயதுடையவரைப் பராமரிக்கப் பண்புள்ள பெண் ஒருவர் தேவை. (40-50வயது)
4. 40 இற்கும் 50 வயதிற்குமிடைப்பட்ட குடிப்பழக்கம் அற்ற கார்ச்சாரதி ஒருவர் தேவை.
5. தங்குமிட வசதிகள், உணவு, உடைகள் யாவும் இலவசமாக வழங்கப்படும்.
தினமும் காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை நேரில் வரவும். சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.
எஸ்.கணேசன்
சமாதான நீதிவான்,
பிரதான வீதி (மக்கள் வங்கிக்கு முன்பாக),
(7565) நெல்லியடி, கரவெட்டி.

எதிர்காலம் இன்றே!
TOMORROW IS TODAY
தொலைபேசிச் சேவையில் புதியதோர் அறிமுகம்
NEW PHASE IN TELECOMMUNICATION
யாழ். மக்களுக்கு!
இன்னும் ஓரிரு தினங்களில் டயலொக் (DIALOG GSM) கையடக்கத் தொலைபேசி உங்கள் பாவனையில். நீங்கள் வீட்டில் இருந்தவாறே உலகெங்கும் உரையாடக்கூடிய வகையில்
* ALCATEL *
* VOXSON *
* SAGEM *
வகைத் தொலைபேசிகளை இணைப்புகளுடன் வழங்குகின்றோம்.
தொடர்புகளுக்கு:
★ செல்வம் கையடக்க தொலைபேசி நிலையம் ஆலடிச்சந்தி, யாழ். வீதி, மானிப்பாய்.
★ செல்வம் கையடக்க தொலைபேசி நிலையம் K.K.S. வீதி, சுன்னாகம்.
மேலும் விவரங்களுக்கு
செல்வம் ஸ்ரோர்ஸ்,
330, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. - 3817, 3605. (7574)

கணக்கீடு A/L 2003 Day
| | பிரிவு I | பிரிவு II |
|---|---|---|
| பகுதி I திங்கள்,செவ்வாய் வியாழன் | 11 - 12.30 | 12.30 - 2.00 |
| பகுதி II புதன், வெள்ளி | 11 - 12.30 | 12.30 - 2.00 |

ஆரம்ப அலகிலிருந்தே துரித மீட்டல்
(கடந்த கால பரீட்சை வினாத்தாள்கள் உட்பட)
"உங்கள் தேவையே எனது சேவை"
S.தவா
B.Com. (Hons) (Acc.spl.)
NEW SCIENCE COLLEGE
(7578) Jaffna.

ஸ்ரார் கல்வி நிலையம்
சுன்னாகம்.
A/L 2003
DAY Class
நடைபெறுகிறது.
Eco. - மோகன் B.B.A. (Hons) (Mon., Tue., Thu. 1 - 2 p.m.)
Acc. - வின்சன் B.B.A. (HRM Spl.) (Mon., Tue., Thu., Fri. 8 - 9)
Bu.St. - உமாகாந் B.Com. (Hons) (7563) (Mon., Tue., Fri. 7 - 8)
கல்வி உலகின் ஒரு தாரகை

லேத்மேன் தேவை
புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள நிறுவனம் ஒன்றுக்கு கடைச்சல் இயந்திரத்தில் வேலை செய்யக்கூடிய அனுபவமுள்ளவர் தேவை.
விண்ணப்ப முடிவு திகதி: 30.08.2002
விளம்பர இல. 1617,
மே/பா உதயன்,
(7562) யாழ்ப்பாணம்.

BEACON யாழ்நகர்.
நடைபெறுகிறது.
DAY CLASS
A/L 2003 அளவையியல்
வியாழன்
குறியீட்டு அளவையியல்
நேரம் 4.00 - 5.00 (p.m.)
பகுதி II சனி, ஞாயிறு
(7531) நேரம்: 10.00 - 11.00

NIRU TUTION CENTRE
Kondavil.
Physics
By. Mr.M.Karunanithy
B.Sc. (Spl)
2003 A/L
மின்னியல்
Mon., Wed. - 6.00 - 7.00 (a.m.)
ஆரம்பம்: 28.08.2002
2004 A/L
அலைகளும் அதிர்வுகளும்
ஆரம்பம்: Tue. 3.30 - 4.30 (p.m.)
27.08.2002 இன்று (7569)

நாளை ஆரம்பம்
சைன் உடுவில்.
A/L 2004
பொருளியல்
சந்தைச்சமநிலை
P.மோகன் (B.B.A. (Hons)
புதன் 4.00 p.m. (7532)

எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்
◆ மம்முட்டி நடித்த
* கார்மேகம் *
◆ பிரகாஸ்ராஜ், தியாகராஜன் நடித்த
* ரவுடி பிறதர்ஸ் *
(பிரதிகள் உடன் பெறலாம்)
வீடியோ விமல்
(C723307) யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### செல்லப்பா அப்புத்துரை

(அப்புத்துரை மாஸ்ரர்)

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா அப்புத்துரை (ஓய்வுபெற்ற ஆசிரியர்) கடந்த 23.08.2002 வெள்ளிக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பூபதி (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும் நாகராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர்)வின் அன்புச் சகோதரனும் சாந்தினி, வசந்தகுமார் (பொறியியலாளர் - கனடா), நந்தினி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் தவராஜா (தொழில்நுட்ப உதவியாளர், டுபாய்), ராதாலட்சுமி (கனடா), சேயோன் (விமான நிலைய பாதுகாப்பு அதிகாரி, கட்டுநாயக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரஞ்ஜித் (விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக்கழகம்), நீரஜா, லாவண்யா, தர்ஷிகா, கல்பனா, ஆதித்தியன், சுபாங்கயன், மிருணாளன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2002) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"கந்தகோட்டம்,"
81,பலாலிவீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
T.P:-021-2215

தகவல்:
சாந்தினி தவராஜா,
அப்புத்துரை வசந்தகுமார்,
(7576) நந்தினி சேயோன் (பிள்ளைகள்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.08.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.